விநோதினி

விநோதினி

ரவீந்திரநாத டாகூர்

தமிழாக்கம்:

த. நா. குமாரஸ்வாமி

சாகித்திய அக்காதெமி
புது தில்லி

Vinodini (*Chokher Bali*) Bengali Novel by Rabindranath Tagore. Tamil Translation by T. N. Kumaraswami. Sahitya Akademi, New Delhi, *1961*. Price Rs. *5*.

முதல் பதிப்பு: 1961

விற்பனை உரிமை:
கலைமகள் காரியாலயம்
சென்னை-4.

Also available at
Sahitya Akademi, New Delhi-1

அச்சிட்டோர்:
எம் எல் ஜே பிரெஸ் (பி.) லிட். சென்னை-4

விலை ரூ. 5

1

• •

வினோதினியின் தாய் ஹரிமதி மகேந்திரனின் அன்னை ராஜ லட்சுமியை விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டாள். இருவரும் ஒரே ஊரில் பிறந்தவர்கள். இளம்பருவத்தில் ஒன்ருக விளையாடியவர்கள்.

ராஜலட்சுமி மகேந்திரனை அணுகினுள்: ''அப்பா மகேன்! ஏழைப் பெண்ணுக்குக் கொஞ்சம் உதவி செய்ய வேண்டும். பெண் நல்ல அழகியாம். வெள்ளைக்காரியிடம் இங்கிலீஷ்கூடப் படித்திருக்கிருள். உன்னைப் போன்ற இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு மிகவும் பிடித்தமாக இருக்கும்'' என்ருள்.

''என்னைப் போன்ற இந்தக் காலத்துப் பிள்ளைகள் வேறு எத்தனையோ பேர் இல்லையா, அம்மா?'' என்ருன் மகேந்திரன்.

''இதுதானே உன்னிடம்! கல்யாணம் என்ற பேச்சையே எடுக்க வழியில்லை.''

''இதைத் தவிரப் பேசுவதற்கு எத்தனையோ விஷயம் இருக்கிறதே, அம்மா! இதைமட்டும் விட்டுவிட்டால் என்ன குடி முழுகிவிடும்!''

மகேந்திரன் இளவயதிலேயே தந்தையை இழந்தான். தாயிடம் அவன் நடந்துகொள்ளும் விதமே தனிப்படை யானதுதான். வயது இருபத்திரண்டு இருக்கும். எம். ஏ., தேறியதும் வைத்தியக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந் தான். இருந்தாலும், சிறு குழந்தையைப்போலத் தாயிடம் கொஞ்சுவதும், பிடிவாதம் பிடிப்பதும் சற்றும் குறையவில்லை. கங்காருவின் குட்டி தாயின் கருப்பையை விட்டு வெளிவந்த பின்னரும், தாய் வயிற்றுப் பையில் மறைந்திருக்கிறதல்லவா? அதைப்போலவே தாயின் தலைப்பைப் பற்றிக்கொண்டிருப்பது அவனுக்கு வழக்கமாகிவிட்டது. சாப்பிடுவதோ, உலாவச் செல்லுவதோ எதுவும் அம்மா இராவிட்டால் அவனுல் முடியாது.

அம்மா அவனை மிகவும் வற்புறுத்தவே, அவன், ''சரி, பெண்ணைப் பார்த்துவிட்டு வரலாம்'' என்ருன்.

பெண் பார்க்கும் நாள் வந்தது. அன்று அவன், ''பெண் பார்க்கவேண்டிய அவசியம் என்ன! உன் திருப்திக்காகத் தானே நான் கல்யாணம் செய்துகொள்கிறேன். பிடித்ததோ, இல்லையோ என்ற கவலையே வேண்டாம்'' என்றான்.

இந்த வார்த்தைகளில் சற்று ரோஷமும் கலந்துதான் இருந்தது. ஆனால் அவன் தாயோ, 'எல்லாம் *சுபதிருஷ்டியின் போது சரியாகிவிடும். என்னைப்போல் அவனுக்கும் பிடித்து விட்டால் தானே பிணக்கும் தீர்ந்துவிடும்' என்று எண்ணினாள். ஆகவே, திருமணத்திற்கு நாள் குறித்துவிட்டாள்.

மண நாள் நெருங்க நெருங்க மகேந்திரனின் மனமும் பரபரப்படைந்தது. கடைசியில் திருமணத்துக்கு நான்கே நாட்கள் இருக்கும்போது அவன், ''அம்மா! இது என்னால் முடியாது'' என்று சொல்லிவிட்டான்.

இளம்பருவ முதலே மகேந்திரன் கேட்டதெல்லாம் அவனுக்குக் கிடைத்தது. தெய்வமும் சரி, மனிதரும் சரி அவன் விருப்பத்திற்குக் குறுக்கே நிற்கவில்லை. அதனால் அவனுடைய கோரிக்கைகளும் விபரீதமாகவே இருந்தன. பிறருடைய வற்புறுத்தலுக்குப் பணிவது அவனால் முடியாது. தன்னுடைய உறுதி ஒரு புறமும், பிறருடைய தூண்டுதல் இன்னொரு புறமுமாக அவனைக் கட்டுப்படுத்தவே, விவாகம் என்ற பேச்செடுத்தால் அவனுக்கு எரிச்சலும் ஆத்திரமும் மேலிட்டன. அதனால்தான் மண நாள் நெருங்கியபோது அவன் முற்றும் எதிரிடையாக மாறிவிட்டான்.

மகேந்திரனின் உற்ற நண்பன் விஹாரி: அவன் மகேந்திரனை, ''அண்ணா'' என்றும், ராஜலட்சுமியை, ''அம்மா'' என்றும் அழைப்பது வழக்கம். நீராவிப் படகுடன் பிணைந்திருக்கும் சாதாரணப் படகைப்போல் விஹாரியை மகேந்திரனுடைய அவசியமான பொருள்களில் ஒன்றாக நினைப்பாள் ராஜலட்சுமி. விஹாரியை விட்டால் மகேந்திரனால் இருக்க முடியாது என்று அவளுக்குத் தெரியும். அதனால் விஹாரியின் மேல் அவளுக்கு ஓரளவு பாசமும் உண்டு. அவள் விஹாரியை அழைத்தாள். ''அப்பா! நீயாவது நான் சொல்கிற காரியத்தைச் செய். பாவம், ஏழைப் பெண்'' என்று பேச்செடுத்தாள்.

விஹாரி கைகளைக் குவித்தான். ''அம்மா! இதுமட்டும் என்னால் ஆகாது. மகேந்திரன் தனக்குப் பிடிக்காது என்று ஒதுக்கிய தின்பண்டங்களை எல்லாம் உனக்காக நான்

---

*மணச் சடங்கின்போது முக்காட்டை விலக்கி மணப் பெண்ணின் முகத்தைப் பார்த்தல்.

எவ்வளவோ தின்றிருக்கிறேன். ஆனால் பெண் விஷயத்தில் - அது என்னால் முடியாது'' என்றான்.

'விஹாரி கல்யாணம் செய்துகொண்டாற் போலத்தான். மகேந்திரனுடனேயே அவனுக்குச் சரியாகப் பொழுது போய் விடுகிறதே! கல்யாணத்தைப்பற்றி நினைக்க அவனுக்கு நேரம் எங்கே இருக்கிறது!' என்று எண்ணிக்கொண்டாள் ராஜ லட்சுமி. இதனால் அவள் விஹாரியின்மேல் கொண்டிருந்த பாசம் பின்னும் அதிகரித்தது.

விநோதினியின் தகப்பனார் அவ்வளவு பணக்காரரல்ல; இருந்தாலும், தம் ஒரே மகளுக்குத் தகுந்த முறையில் ஆங்கி லக் கல்வியும், கைவேலையும் கற்றுக் கொடுத்திருந்தார். அந்த ஆர்வத்தில் பெண்ணின் வயது மடமடவென்று ஏறுவதையும் கவனிக்கவில்லை. அவர் காலமான பின்னர், பெண்ணுக்கு இடந் தேடுவது விதவைத் தாய்க்குச் சங்கடமாகிவிட்டது. கையில் பணம் இல்லை; பெண்ணுக்கும் வயது அதிகமாகிவிட்டது.

ராஜலட்சுமி தன் பிறந்த வீடான பாராஸத் கிராமத்தில் சற்றுத் தொலைவான உறவில் அண்ணன் மகனுக்கு விநோ தினியை மணம் செய்து வைத்தாள். சில நாட்களுக்குள் விநோதினி கைம்பெண் ஆனாள்.

மகேந்திரன் இது தெரிந்ததும் சிரித்தான். ''நல்ல வேளை! அவளை நான் கல்யாணம் செய்துகொள்ளவில்லை'' என்றான்.

மூன்று ஆண்டுகளுக்குப் பின் ஒரு நாள் தாயும் மகனும் பேசிக்கொண்டிருந்தனர்.

''ஏன் அப்பா, ஊரெல்லாம் என்னைத் தூற்றுகிறார்களே!''

''எதற்கு, அம்மா! அவர்களுக்கு நீ என்ன செய்தாய்?''

''உனக்குக் கல்யாணமாகி வீட்டுக்கு மருமகள் வந்தால் நீ வேறாகிவிடுவாய் என்று பயந்துதான் நான் உனக்குக் கல்யாணம் செய்து வைக்கவில்லையாம்! இப்படித்தான் ஊரெல்லாம் பேச்சாக இருக்கிறது.''

''பயப்பட வேண்டியதுதானே! நான்மட்டும் அம்மா வீராக இருந்தால் உயிர் போவதானாலும் பிள்ளைக்குக் கல்யாணம் செய்து வைக்கமாட்டேன். ஊராரின் பழிச் சொல்லைத் தலைமேல் ஏற்றுக்கொள்வேன்.''

ராஜலட்சுமிக்குச் சிரிப்பு வந்தது. ''நல்ல பிள்ளைதான், போ!'' என்றாள்.

''பெண்டாட்டி வந்தால் கட்டாயமாகப் பிள்ளையை வலைக்குள் போட்டுக்கொள்ளுவாள். அப்போது கஷ்டப் பட்டு இத்தனை காலம் அன்பாக வளர்த்த தாய் எங்கேயோ ஒதுங்கிவிடுகிறாள். உனக்கு இது பிடிக்கிறதோ என்னவோ; எனக்குச் சற்றும் பிடிக்கவில்லை.''

ராஜலட்சுமிக்கு உள்ளூற உவகை பொங்கியது. அவள் அப்போதுதான் வந்திருந்த விதவை ஓரகத்தியை அழைத்தாள். ''கேளடியம்மா, மகேன் சொல்லுவதை: பெண்டாட்டி வந்து அம்மாவை ஒதுக்கிவிடுவாளோ என்ற பயத்தில் அவனுக்குக் கல்யாணமே வேண்டாமாம். இப்படியும் ஓர் அசட்டுப் பிள்ளை உண்டோ!'' என்றாள்.

''நீங்கள் செய்வது கொஞ்சங்கூட நன்றாக இல்லை. அந்த அந்தக் காலத்தில் அதது நடந்தால்தான் அழகு. பெண்டாட்டியுடன் குடித்தனம் செய்கிற வயதில் சின்னக் குழந்தைபோல் அம்மாவின் தலைப்பைப் பிடித்துக்கொண்டு நிற்பது வெட்கமாக இல்லையா?'' என்றாள் மகேனின் சிற்றன்னை.

ராஜலட்சுமிக்கு இந்த வார்த்தைகள் இதமாகப் படவில்லை. இதற்கு அவள் சொன்ன பதில் சாதாரணமாகத் தோன்றினாலும் கேட்பதற்கு இனிமையாக இல்லை. ''என் பிள்ளை மற்றவர்களைவிட அம்மாவிடம் அதிக ஆசை வைத்திருக்கிறான். இதில் வெட்கமென்னடி! பிள்ளை இருந்தால்தானே உனக்கு அந்த அருமை தெரியப்போகிறது?'' என்றாள் ராஜலட்சுமி. பிள்ளைப் பேறு இல்லாதவள் தன்னைக் கண்டு பொறாமைப்படுவதாகவே அவள் மனத்தில் தோன்றியது.

''நீங்கள் மருமகளைப்பற்றிப் பேச்செடுக்கவே தானே இதெல்லாம் வந்தது? இராவிட்டால் எனக்கு ஏது உரிமை?'' என்றாள் ஓரகத்தி.

''என் பிள்ளை கல்யாணம் செய்துகொள்ளவில்லை என்று ஏனடி உனக்கு வேதனை! இத்தனை காலமாக வளர்த்தவள் நான். இனிமேலும் என்னால் அவனைப் பார்த்துக்கொள்ள முடியும். வேறு ஒருத்தரும் அவசியமில்லை.''

மற்றவள், கண்களில் நீர் துளிக்க மறுமொழி கூறாமல் மெல்ல அகன்றாள். மகேந்திரனுக்கு உள்ளூற வேதனை பொங்கியது. அன்று மாலை கல்லூரியிலிருந்து சீக்கிரமே திரும்பியவன், சிற்றன்னையின் அறைக்குச் சென்றான்.

தன் மேலுள்ள அன்பினால்தான் அவள் அவ்வளவு தூரம் சொன்னாளென்று மகேந்திரனுக்குத் தெரியும். சிற்றன்னைக்குத் தாய்தந்தையரை இழந்த தங்கை மகள் ஒருத்தி இருந்தாள். அவளை மகேந்திரனுக்கு மணம் செய்வித்துத் தன்னிடமே வைத்துக்கொள்ள வேண்டுமென்பது அவள் ஆசை. அது மகேந்திரனுக்குத் தெரியும். கல்யாணமென்றாலே அவனுக்குப் பிடிக்காது. ஆனால் சிற்றன்னையின் இந்த ஆசைக்கு அவளுடைய இளகிய மனந்தான் காரணம் என்று அவனுக்குப் பட்டது. சிற்றன்னை அவ்வாறு ஆசைப்படுவது இயல்புதானே!

சிற்றன்னையின் அறைக்குள் அவன் சென்றபோது பொழுது சாய்ந்து கொண்டிருந்தது. சிற்றன்னை அன்னபூரணி சாளரக் கம்பிகளின்மேல் சாய்ந்தவாறு முகவாட்டத்துடன் உட்கார்ந்திருந்தாள். பக்கத்து அறையில் உணவு மூடி வைத்திருந்தது. அதை அவள் தொடவே இல்லை.

சிறு விஷயமானாலும் மகேனின் கண்களில் நீர் வந்துவிடும். சிற்றன்னையை இந்த நிலையில் கண்டதும் அவன் கண்ணீர் முத்திட்டது. அவன் சிற்றன்னையின் அருகில் வந்து மெல்ல, ''சின்னம்மா'' என்று அழைத்தான்.

அன்னபூரணி சிரிக்க முயன்றாள். ''வா அப்பா மகேன்! உட்கார்.''

''மிகவும் பசிக்கிறது, சின்னம்மா, ஏதாவது தின்பதற்குக் கொடேன்.''

மகேந்திரனுடைய தந்திரத்தைப் புரிந்துகொண்டாள் அன்னபூரணி. பொங்கிவரும் கண்ணீரை வெகு பாடுபட்டு அடக்கிக்கொண்டு அவள், தான் உணவு அருந்தியபின் மகேனுக்கும் கொடுத்தாள்.

மகேந்திரனுடைய உள்ளம் அப்போது பாகாக உருகியிருந்தது. சிற்றன்னைக்கு ஆறுதல் சொல்ல வாயெடுத்தவன், ''சின்னம்மா! உன் தங்கையின் பெண்ணைப்பற்றிச் சொன்னாயே! அவளை எனக்குக் காட்டமாட்டாயா?'' என்று மனத்தில் பட்டதைக் கேட்டுவிட்டான். இதைக் கேட்ட பிறகு அவனுக்கு உள்ளூறக் கிலி பிடித்துக்கொண்டது.

அன்னபூரணி புன்னகை புரிந்து, ''ஏனப்பா, மகேன்? உனக்குக்கூடக் கல்யாண ஆசை வந்துவிட்டதா?'' என்றாள்.

மகேந்திரன் பரபரப்புடன் குறுக்கிட்டான். ''எனக்காக இல்லை, சித்தி! விஹாரியை ஒப்புக்கொள்ளச் செய்கிறேன். பெண் பார்க்க ஒரு நாள் குறிப்பிடேன்'' என்றான்.

''அவ்வளவு அதிர்ஷ்டக்காரியா அவள்! விஹாரியைப் போன்ற கணவன் கிடைக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே!''

சிற்றன்னையின் அறையை விட்டு வெளியே வரும்போது கதவின் அருகே தாயைச் சந்திக்க நேர்ந்தது. ''ஏன் மகேன், என்ன ஆலோசனை உள்ளே?'' என்று கேட்டாள் ராஜலட்சுமி.

''ஆலோசனை ஒன்றுமில்லை, அம்மா! வெற்றிலைபாக்கு எடுத்துக்கொள்ள வந்தேன்.''

''ஏனடா, என் அறையில்தான் உனக்காக எல்லாம் எடுத்து வைத்திருக்கிறேனே!''

மகேந்திரன் அதற்கு மறுமொழி கூறாமல் அங்கிருந்து நழுவினான்.

ராஜலட்சுமி உள்ளே நுழைந்தாள். அழுது சிவந்த அன்ன பூரணியின் கண்களைக் கண்டதும் ராஜலட்சுமியின் மனத்தில் பல எண்ணங்கள் எழுந்தன. ''ஏன், பிள்ளையிடம் கோள் சொல் லிக்கொண்டிருந்தாயோ!'' என்று எரிச்சலுடன் கேட்டவள், பதிலுக்குக் காத்திராமல் விடுவிடென்று சென்றுள்.

2

பெண் பார்க்கும் விஷயத்தை மகேந்திரன் மறந்து விட்டான். ஆனல் அன்னபூரணி மறக்கவில்லை. சியாமாபஜா ரில் இருந்த பெண்ணின் பெரியப்பாவுக்குக் கடிதம் எழுதிப் பெண்பார்க்க நாளும் குறித்துவிட்டாள்.

நாள் குறித்த விஷயம் மகேந்திரன் காதிற்கு எட்டியது. ''இத்தனை அவசரப்பட்டுவிட்டாயே, சின்னம்மா? விஹாரிக்கு இன்னும் நான் சொல்லக்கூட இல்லையே?'' என்றுன் அவன்.

''அதென்னப்பா, மகேன்! அப்படிச் சொன்னல்! இப் போது பெண் பார்க்கப் போகாவிட்டால் அவர்கள் என்ன நினைத்துக்கொள்வார்கள்!''

மகேந்திரன் விஹாரியை அழைத்து விஷயத்தை விவர மாகச் சொன்னன். ''வாயேன். உனக்குப் பிடிக்காவிட்டால் உன்னை யாரும் தொந்தரை செய்யமாட்டார்கள்'' என்றுன்.

''அது என்னல் ஆகாது. சின்னம்மாவின் தங்கை பெண் ணைப் பார்த்தபின் பிடிக்கவில்லை என்ற சொல் என் வாயில் வராது!'' என்றுன் விஹாரி.

''மிகவும் நல்லதாயிற்று'' என்றுன் மகேந்திரன்.

''ஆனல் நீ செய்வது மிகவும் தவறு, மகேன்! நீ தனிப் பறவையாகத் திரிகிருய். ஆனல் பிறத்தியார் தலையில் பளுவை ஏற்றுகிருய்! இது சரியல்ல! இப்போது சின்னம்மாவின் மனத்தைப் புண்படுத்துவது என்னல் முடியாது.''

மகேந்திரனுக்கு ஒருபுறம் கூச்சமும், ஒருபுறம் ரோஷமு மாக வந்தது. ''என்னதான் செய்யப் போகிருய்?'' என்றுன்.

''என் பெயரை எப்போது சின்னம்மாவிடம் சொல்லி விட்டாயோ, நிச்சயமாக நான் கல்யாணம் செய்து கொள் கிறேன். பெண் பார்க்கும் ஆடம்பரம் எதற்கு?'' என்றுன் விஹாரி. அன்னபூரணியை விஹாரி தெய்வம் போல எண்ணு வான். அவளிடம் அவனுக்கு நிறைந்த பக்தி.

கடைசியில் அன்னபூரணி தானே விஹாரியை அழைத்தாள்.

''இதென்னடா அப்பா! பெண்ணைப் பார்க்காமல் கல்யாணம் செய்துகொள்ளக் கூடாது. பிடிக்காவிட்டால் நீ கல்யாணத்துக்கு ஒப்புக்கொள்ளக்கூடாது. என் பேரில் ஆணை!'' என்றான்.

குறிப்பிட்ட நாளன்று மகேந்திரன் கல்லூரியிலிருந்து வந்ததுமே தாயிடம், ''அம்மா! எனக்கு அந்தப் பட்டுச் சொக்காய், வேஷ்டி இரண்டையும் எடுத்துக்கொடு'' என்றான்.

''ஏன், எங்கே போகப் போகிறாய்?''

''அவசியமான வேலை இருக்கிறது. அப்புறம் சொல்லுகிறேன்.''

சிங்காரித்துக்கொள்ளாமல் இருக்க மகேந்திரனால் முடியவில்லை. பெண் பார்க்கப் போவது பிறருக்காகத்தான் என்றாலும், பெண் பார்ப்பது என்றதுமே தலையைப் படிய வாரிக் கொள்ளவும், கைக்குட்டையில் வாசனை அத்தரைத் தடவிக் கொள்ளவும் தோன்றுவது இளமையின் இயல்புதானே!

நண்பர்கள் இருவருமாகப் பெண் பார்க்கச் சென்றனர். பெண்ணின் பெரியப்பா அநுகூல பாபு, சியாமா பஜாரில் இருந்தார். தம் சொந்த வருவாயைக் கொண்டே தோட்டமும் மச்சுமாகப் பெரியதொரு வீட்டைக் கட்டிவிட்டார். அந்தப் பேட்டைக்கே அந்த வீடுதான் சிகரமாக அமைந்திருந்தது.

ஏழையான தம்பி காலமானதுமே, தாய் தந்தையரை இழந்த அவன் மகளைத் தம் வீட்டுக்கு அவர் அழைத்து வந்தார். பெரியம்மா அன்னபூரணி, ''என்னிடந்தான் இருக்கட்டுமே!'' என்றாள். அதனால் செலவு குறையும்; ஆனால் சுயமரியாதை குன்றி விடுமோ என்று அநுகூல பாபு பயந்தார். ஆகவே, அவர் அன்னபூரணி சொன்னதற்கு இசையவில்லை. அவ்வப்போது பார்ப்பதற்குக்கூட அவர் பெண்ணைப் பெரியம்மா வீட்டுக்கு அனுப்புவதில்லை. சுயமரியாதை விஷயத்தில் அவர் அவ்வளவு கடுமையாக இருந்தார்.

பெண்ணுக்குக் கல்யாணப் பருவம் நெருங்கியது. ஆனால் இந்தக் காலத்தில் பெண்ணின் திருமண விஷயத்தில், 'எண்ணியபடியே பலன் கிடைக்கும்' என்ற சொல் பலிப்பதில்லை; எண்ணுவதற்கு ஏற்ற பணமும் தேவை. ஆனால் வரதட்சிணை என்ற பேச்சை எடுத்தால் அநுகூல பாபு, ''எனக்கும் சொந்தமாகப் பெண் இருக்கிறாள். ஒன்றி ஆளாக நான் எவ்வளவுதான் செய்ய முடியும்!'' என்று சொல்லிவிடுவார். இப்படியே நாட்கள் ஓடின. இந்த வேளையில் வாசனை வீச, புத்தாடை உடுத்துத் தன் நண்பனுடன் மேடையில் தோன்றினான் மகேந்திரன்.

சித்திரை மாதம். பொழுது சாயும் சமயம் மேல்மாடியில் தென்னண்டைத் தாழ்வாரத்தில் சீனச் சித்திரங்கள் வரைந்த

மெல்லிய மேஜை; அதன் இரு புறங்களிலும் விருந்தாளிகளுக்காக வெள்ளித் தட்டுக்களில் பழங்களும் இனிப்புத் தின்பண்டங்களும் வைத்திருந்தன. அருகில் வெள்ளிப் பேழைகளில் பன்னீர். மகேந்திரனும், விஹாரியும் கூச்சத்துடன் உண்ணத் தொடங்கினர்கள். கீழே தோட்டத்தில் தோட்டக்காரன் பூஞ் செடிகளுக்கு நீர் ஊற்றிக்கொண்டிருந்தான். அந்த ஈர மண் வாசனையை ஏந்திய சித்திரைத் தென்றல் மகேந்திரனுடைய வாசனை தடவிய மேல் அங்கவஸ்திரத்தின் மடிப்புகளை அலைத்துக் கொண்டிருந்தது. அக்கம்பக்கத்துக் கதவு, சாளரங்களின் மறைவிலிருந்து மெல்லிய சிரிப்பும் ரகசியம் பேசிக்கொள்ளும் குரலும் சலுங்கென்ற நகைகளின் ஒலியும் கேட்டன.

உணவருந்தியபின் அநுகூல பாபு உள்புறம் நோக்கினர். ''சுனி! வெற்றிலை கொண்டுவா'' என்ருர்.

கொஞ்ச நேரம் சென்ற பிறகு அறைக்கதவு மெல்லத் திறந்துகொண்டது. கூச்சமே உருவாக ஒரு சிறுமி வெற்றிலைத் தட்டுடன் மெல்ல அநுகூல பாபுவின் அருகே வந்து நின்ருள். அவர், ''என்ன அம்மா கூச்சம்! அந்தத் தட்டை அவர்கள் முன்னல் வையேன்'' என்ருர்.

அந்தப் பெண் கூச்சத்தால் கை தடுமாற வெற்றிலைத் தட்டை விருந்தினரின் பக்கத்தில் தரையில் வைத்தாள். வெட்கிச் சிவந்த அம்மடந்தையின் முகத்தில் வராந்தாவின் மேலண்டை மூலையிலிருந்து மாலை மங்கல் வந்து படிந்தது. அந்தக் கணத்தில் மகேந்திரன், நடுக்கத்துடன் நின்ற அந்தப் பெண்ணின் உருக்கம் நிரம்பிய முகத்தை நோக்கினன்.

அந்தப் பெண் புறப்படத் தொடங்கும்போது, அநுகூல பாபு, ''கொஞ்சம் இரு அம்மா, சுனி! விஹாரி பாபு, இவள் என் தம்பி அபூர்வனின் பெண். அவன் தான் போய் விட்டான். இப்போது என்னைத் தவிர வேறு யாரும் இவளுக்கு இல்லை'' என்று சொல்லிவிட்டுப் பெருமூச்செறிந்தார்.

மகேந்திரன் பார்வை அந்தத் திக்கற்ற சிறுமியின் பக்கம் சென்றது.

சொந்த வயதை யாரும் தெளிவாகச் சொல்லமாட்டார்கள். உறவினர், ''பன்னிரண்டு பதின்மூன்று இருக்கும்'' என்பார்கள். அதாவது பதினன்கு, பதினைந்துக்குள் நிச்சயமாக இருக்கும் என்று அர்த்தம். ஆனல் பிறர் தயையில் வளர்ந்த பெண் அவள்; அதனல் கூச்சமும் பயமும் கலந்து அவளுடைய இளமையின் தொடக்கத்தை அடக்கமாக வைத்திருந்தன.

மகேந்திரன் இளகிய குரலில், ''உன் பெயர் என்ன?'' என்று கேட்டான். அநுகூல பாபு, ''சொல் அம்மா! உன் பெயரைச் சொல்லு!'' என்று தூண்டினர். அந்தப் பெண் வழக்கம்

போல் கட்டளையை நிறைவேற்றும் பாவனையில் குனிந்த தலையுடன், ''ஆசாலதா'' என்றாள்.

ஆசா! 'இந்தப் பெயரில் எவ்வளவு மென்மை! எவ்வளவு இனிமை' என்று தோன்றியது மகேந்திரனுக்கு. திக்கற்ற சிறுமி ஆசா!

நண்பர்கள் இருவரும் வெளியே வந்து வண்டியில் புறப்பட்டார்கள். ''விஹாரி! இந்தப் பெண்ணைத் தள்ளாதே!'' என்றான் மகேந்திரன்.

விஹாரி அதற்குப் பதில் சொல்லவில்லை. ''பெண்ணைப் பார்த்தால் பெரியம்மாவின் நினைவு வருகிறது. அவளைப் போலவே குணமும் இருக்கும்; குல விளக்காக விளங்குவாள்'' என்றான் அவன்.

''அப்படியென்றால், உன் தோளில் நான் போட்ட பளு இப்போது அத்தனை கடினமாகத் தோன்றவில்லை என்று சொல்.''

''இல்லை, என்றால் தாங்கக்கூடிய சுமைதான்.''

''எதற்காக நீ சிரமப்பட வேண்டும்! உன் சுமையை வேண்டுமானால் நானே என் தோளில் ஏற்றிக்கொள்கிறேன். என்ன சொல்கிறாய்!''

விஹாரி மகேந்திரனுடைய முகத்தைக் கூர்ந்து நோக்கினான். ''மகேன்! நிச்சயமாகச் சொல்கிறாயா! இப்போதாவது சொல். நீ விவாகம் செய்துகொண்டால் சின்னம்மாவுக்கும் மிகத் திருப்தியாக இருக்கும். பெண்ணையும் எப்போதும் தன்னிடமே வைத்துக்கொள்ள அவளால் முடியும்.''

''உனக்கென்ன பைத்தியமா பிடித்துவிட்டது! அது நடப்பதாக இருந்தால் என்றைக்கோ முடிந்திருக்குமே!''

விஹாரி தடை ஏதும் கூறாமல் சென்றான். மகேந்திரனும் நேர்ப்பாதையில் செல்லாமல் சுற்று வழியே மெல்ல நடந்து வீடு சேர்ந்தான்.

அவனுடைய தாய் பூரியிட்டுப் பொரித்துக்கொண்டிருந்தாள். சிற்றன்னை இன்னும் தங்கையின் பெண்ணைவிட்டு வரவில்லை.

மகேந்திரன் தனியே சந்தடியற்ற மாடியின் திறந்த வெளியில் கம்பளத்தை விரித்துப் படுத்தான். வளரும் ஏழாம் பிறைமதி ஆடம்பரமின்றிக் கல்கத்தா மாளிகைகளின் மேல் தன் மாயத்தை அள்ளித் தெளித்தது. தாய் மகேந்திரனை உண வருந்த அழைத்தபோது, அவன் சோம்பலுடன், ''அம்மா! இப்போது எனக்கு எழுந்திருக்கப் பிடிக்கவில்லை; இப்படியே இருக்கிறேன்'' என்றான்.

''இங்கேயே கொண்டுவரட்டுமா?'' என்றாள் ராஜலட்சுமி.

''எனக்கு ஒன்றும் வேண்டாம்; நான் சாப்பிட்டாயிற்று.''

''எங்கே சாப்பிட்டாய்?''

''அதெல்லாம் பெரிய கதை. அப்புறமாகச் சொல்லு கிறேன்.''

மகேந்திரன் இதுவரையில் இப்படி நடக்காதவன். இன்று அவனுடைய இந்த எதிர்பாராத போக்கு ராஜலட்சுமிக்கு வருத்த மூட்டியது. அவள் பதில் ஏதும் சொல்லாமல் திரும்ப லானுள்.

கண நேரத்துக்குள் மகேந்திரன் சமாளித்துக்கொண்டு, ''அம்மா! எனக்கு இங்கேயே சாதம் கொண்டு வா'' என்று கெஞ்சும் குரலில் சொன்னுன்.

''பசிக்காவிட்டால் எதற்கு?'' என்ருள் தாய்.

இந்தச் சிறு விஷயத்துக்காகத் தாயும் மகனும் சிறிது நேரம் வாதாடினர். பின்னர் மகேந்திரன் மீண்டும் உணவு கொள்ள உட்கார்ந்தான்.

3

அன்றிரவு மகேந்திரனுக்குத் தூக்கமே வரவில்லை. பொழுது விடிந்ததுமே அவன் விஹாரியின் வீட்டுக்குச் சென் ருன். ''அப்பனே! நான் யோசித்துப் பார்த்தேன். தன் தங்கையின் பெண்ணை நான் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று சின்னம்மாவுக்கு உள்ளூற ஆசை'' என்ருன்.

''இதில் நீ யோசித்துப் பார்க்கும்படி புதிதாக ஒன்றும் இல்லையே! உன் சின்னம்மாவும் அவள் ஆசையை எத்த னையோ விதமாகச் சொல்லிவிட்டாளே''.

''அதுதான் சொல்கிறேன். ஆசாவை நான் கல்யாணம் செய்துகொள்ளாவிட்டால் அவள் மனத்தில் ஏமாற்றம் உண் டாகிவிடும்''.

''ஆமாம்...''

''அது என்வரைக்கும் பெரிய அநியாயந்தானே!''

விஹாரிக்கு உண்டான களிப்பு இயல்புக்குச் சற்று மாருகவே இருந்தது. ''நல்லது. நீ சொல்வது மிகவும் சரி. உனக்கு இஷ்டமென்ருல் வேறு பேச்சுக்கே இடமில்லை. ஆனுல் இந்தக் கடமை உணர்ச்சி நேற்றே உனக்கு உதயமாகி யிருந்தால் நன்ருக இருந்திருக்கும்'' என்ருன்.

''ஒரு நாள் தாமதமாகிவிட்டதால் என்ன குறைந்து விட்டதாம்!''

கல்யாணம் என்றாலே எதிர்த்து நின்ற மகேந்திரனால் அதே விஷயத்தில் பொறுமையுடன் இருக்க முடியவில்லை. அதிகமாக வளர்த்தாமல், பேசாமல் இந்தக் காரியம் விரைவில் நடந்தேறினால் நல்லது என்று அவனுக்குத் தோன்றியது.

அவன் நேரே தன் தாயிடம் சென்றான். ''அம்மா! நீ சொல்கிறபடியே செய்கிறேன். நான் மணம் செய்து கொள்ளத் தயார்'' என்றான்.

'புரிந்தது. அன்று உன் சின்னம்மா தன் தங்கையின் பெண்ணைப் பார்க்கப் போனதும், நீ தடபுடலாக உடை அணிந்து சென்றதும் இதற்குத்தானா!' என்று தனக்குள் எண்ணிக்கொண்டாள் ராஜலட்சுமி.

எவ்வளவோ விதமாகத் தான் முயன்றபோதும், அன்னபூரணியின் சூழ்ச்சி பலித்துவிட்டதே என்று ராஜலட்சுமிக்கு விதியின்மேல் எரிச்சலாக வந்தது. ''ஒரு நல்ல பெண்ணைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்'' என்றாள் அவள்.

மகேந்திரன், ''பெண் கிடைத்தாயிற்று'' என்று ஆசாவைப்பற்றிச் சொன்னான்.

''அந்தப் பெண்ணைப்பற்றிப் பேச்செடுக்காதே! அது நடக்காது'' என்றாள் ராஜலட்சுமி.

முடிந்தவரையில் தன்னை அடக்கிக்கொண்டான் மகேந்திரன். ''ஏனம்மா! அவள் நன்றாகத்தானே இருக்கிறாள்!'' என்றான்.

''மூன்று தலைமுறையில் உறவு என்று அவளுக்கு யாருமே கிடையாது. அவளைக் கல்யாணம் செய்துகொண்டால் எனக்கு நிம்மதி ஏது?''

''உறவு, குடும்பம் எல்லாம் எனக்குத் தெரியாது. ஆனால் பெண்ணை எனக்குப் பிடித்துவிட்டது.''

பிள்ளையின் பிடிவாதத்தைக் கண்டு ராஜலட்சுமியின் மனம் பின்னும் கடினமாகியது. அவள் அன்னபூரணியிடம் சென்று, ''தாய் தகப்பன் இராத பெண்ணை என் பிள்ளைக்குக் கல்யாணம் செய்து வைத்து அவனை என்னிடமிருந்து பிரித்து வைக்கப் போகிறாயா! இத்தனை பெரிய சூழ்ச்சியா?'' என்று கேட்டாள். அன்னபூரணிக்கு அழுகை பொத்துக்கொண்டு வந்தது. ''மகேந்திரனைப்பற்றி எதுவுமே பேச்சு இல்லையே! அவன் உங்களிடம் என்ன சொன்னானோ அதுவும் எனக்குத் தெரியாதே!'' என்றாள் அவள்.

ராஜலட்சுமியினால் அதை நம்பவே முடியவில்லை. அன்னபூரணி விஹாரியை அழைத்துக் கண்ணீரும் கம்பலையுமாக, ''உனக்குக் கொடுப்பதாகத்தானே பேச்சு! ஏன் அதை மீறி விட்டாய்? நீயேதான் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும்.

நீ கைகொடுக்காவிட்டால் என்னால் தலையே நிமிர முடியாதபடி அவமானம் ஏற்படும். பெண் நல்ல குணவதி: உனக்கு எந்த விதத்திலும் தகுதியானவள்'' என்றாள்.

''சின்னம்மா! அதை நீ எனக்குச் சொல்லவும் வேண்டுமா! உன் தங்கை பெண்ணாயிற்றே! நான் குறை சொல்ல என்ன இருக்கிறது? ஆனால் மகேந்திரன்..''

''இல்லையப்பா! மகேந்திரனுக்கும் அவளுக்கும் கல்யாணம் நடக்க முடியாது. உன்னிடம் நான் உண்மையாகவே தான் சொல்கிறேன். நீ அவளை ஏற்றுக்கொண்டால்தான் எனக்கு முழு நிம்மதி. மகேந்திரனுக்கு அவளைக் கொடுப்பதில் எனக்கு இஷ்டமில்லை..''

''சின்னம்மா! உனக்கு இஷ்டமில்லை என்றால் வேறு பேச்சு ஒன்றுமே இல்லை.''

அங்கிருந்து விஹாரி ராஜலட்சுமியிடம் சென்றான். ''அம்மா! சின்னம்மாவின் தங்கை பெண்ணுக்கும் எனக்கும் கல்யாணம் நிச்சயமாகிவிட்டது! உறவு என்று சொல்லிக் கொள்ள எனக்குப் பெண்கள் யாரும் இல்லை. அதனால்தான் வெட்கத்தைவிட்டு நானே உனக்குச் சொல்லவேண்டியதாயிற்று.''

''விஹாரி! நீ சொல்வது நிஜமா? எனக்கு மிகவும் சந்தோஷம். நல்ல பெண்! உனக்கு ஏற்றவள். கை தவற விட்டு விடாதே!'' என்றாள் ராஜலட்சுமி.

''கை தவறுவானேன்! மகேந்திரனே பார்த்து எனக்கு நிச்சயம் செய்திருக்கிறான்!''

இப்படித் தடைகள் நேரிடுவது கண்டு மகேந்திரனுக்கு ஆத்திரம் மேலிட்டது! அவன் தாயுடனும் சிற்றன்னையுடனும் கோபித்துக்கொண்டு ஏழை மாணவர் விடுதி ஒன்றுக்குப் போய்விட்டான்.

ராஜலட்சுமி அழுதுகொண்டே அன்னபூரணியிடம் சென்றாள். ''அம்மாடி! என் பிள்ளை வெறுத்துப் போய் வீட்டை விட்டுப் போய்விட்டானே! அவனைக் காப்பாற்று'' என்றாள்.

''அக்கா! கொஞ்சம் பொறுமையாக இரு. இரண்டு நாளில் அவன் கோபம் தணிந்துவிடும்.''

''அவனைப்பற்றி உனக்குத் தெரியாது. தனக்குப் பிடித்தது கிடைக்காவிட்டால் மனம் போனபடி செய்து விடுவான். உன் தங்கையின் பெண்ணை எப்படியாவது....''

''அது எப்படி முடியும், அக்கா? விஹாரிக்கு அவளைக் கொடுப்பது என்று நிச்சயமாகிவிட்டது!''

''அதை மாற்றுவது கடினமா!'' என்று ராஜலட்சுமி விஹாரியை அழைத்தாள். ''அப்பா! உனக்கு நல்ல பெண்

ணைகப் பார்த்து முடிவு செய்கிறேன். இவளைமட்டும் விட்டு விடு. உனக்கு இவள் தகுதியானவள் அல்ல'' என்றாள்.

''இல்லை, அம்மா! அது நடக்காது. எல்லாம் முடிவாகி விட்டது'' என்றான் விஹாரி.

ராஜலட்சுமி மீண்டும் அன்னபூரணியை அணுகினாள். ''நீ சொன்னால் விஹாரி ஒப்புக்கொள்வான். நீதான் எப்படியாவது சரிக் கட்டவேண்டும். இராவிட்டால் என் தலையைத் தின்ன மாதிரி!'' என்றாள்.

அன்னபூரணி விஹாரியை அழைத்தாள்: ''அப்பா! உனக்குச் சொல்லவே எனக்கு நா எழவில்லை. ஆனால் என்ன செய்வது! ஆசா உன்னை மணந்துகொண்டாலே என் மனம் கவலையில்லாமல் இருக்கும். உனக்கு எல்லாம் தெரியும்....''

''எனக்குப் புரிகிறது, சின்னம்மா! நீ என்ன சொன்னா லும் சரி, அதன்படியே நடக்கும். ஆனால் இனிமேல் எந்தப் பெண்ணையும் கல்யாணம் செய்துகொள் என்று என்னைக் கேட் காதே!'' என்றதும் விஹாரி போய்விட்டான்.

அன்னபூரணியின் விழிகளில் நீர் திவலையிட்டது. ஆனால் மகேந்திரனுக்குத் தீங்கு நேருமோ என்று அஞ்சி அவள் கண் ணீரைத் துடைத்துக்கொண்டாள். ''நடப்பதெல்லாம் நல்ல தற்குதான்'' அவள் தன்னைத் தானே தேற்றிக்கொண்டாள்.

ராஜலட்சுமி, அன்னபூரணி, மகேந்திரன் இந்த மூவருக்கு மிடையே பேச்சு வார்த்தைகள் குறைந்தன. மனக்கசப் பிடையே திருமண நாளும் வந்தது. எந்த விதமான குறைவும் இராமல் கல்யாணம் நடந்தேறியது. விளக்குகளும், மேளதாள மும், விருந்தும் குறைவின்றி அமைந்தன.

புத்தாடையுடுத்து, நாணம் தோய்ந்த முகத்துடன் ஆசா புக்ககத்தில் அடியெடுத்து வைத்தாள். இந்தப் புது இடத்தில் முள் எங்காவது இருக்கலாம் என்பதை அவளுடைய மென்மை யான உள்ளம் உணரவில்லை. அதற்குப் பதிலாக, தாய்க்குச் சமமான பெரியம்மா அன்னபூரணியிடம் வருகிறோம் என்ற ஆறுதலும் ஆனந்தமும் அவளுடைய சந்தேகம், பயம் எல்லா வற்றையும் மறக்கச் செய்தன.

மணமானபின் ராஜலட்சுமி மகேந்திரனை அழைத்தாள். ''இன்னும் கொஞ்ச நாள் ஆசா அவள் பெரியப்பாவிடமே இருக்கட்டுமே!'' என்றாள்.

''எதற்கு, அம்மா?''

''இந்த வருஷம் உனக்குப் பரீட்சை இருக்கிறது. படிப் புக்குத் தடையாக இருக்குமே!''

''நான் என்ன குழந்தையா? எனக்கு நல்லது, கெட்டது தெரியாமலா போய்விட்டது?''

''இருக்கட்டுமே! ஒரு வருஷந்தானே!''

''அவளுக்கு அப்பா, அம்மா இருந்தால் அனுப்பலாம். பெரியப்பா வீட்டில் விட்டு வைக்க எனக்கு இஷ்டமில்லை.''

'அடேயப்பா! மிகவும் பெரிய மனிதன்தான்! மாமியார் ஒன்றுமில்லைதான்! நேற்றுக் கல்யாணம்; அதற்குள் இத்தனை தூரமா! எங்களுக்குந்தான் கல்யாணம் நடந்தது. ஆனால் பெண்பித்து இந்த அளவில் நான் கண்டதில்லை. கூச்சமே இல்லையே!' என்று தனக்குள் எண்ணிக்கொண்டாள் ராஜலட்சுமி.

மகேந்திரன் அழுத்தந் திருத்தமாகச் சொல்லிவிட்டான்; ''ஒன்றும் கவலைப்படாதே, அம்மா! பரீட்சைக்கு இடையூறு ஒன்றும் இராது.''

4

ராஜலட்சுமி அளவிறந்த ஆர்வத்துடன் மருமகளுக்கு வீட்டு வேலை கற்றுக் கொடுக்கத் தொடங்கினாள். சாமான் அறை, சமையல் அறை, பூஜை அறைகளிலேயே ஆசாவின் பொழுது கழியலாயிற்று. இரவு வேளைகளில் ராஜலட்சுமி அவளைத் தன்னுடனேயே படுக்க வைத்துக்கொள்ளுவாள். அதன் மூலம் உறவினரைப் பிரிந்த வேதனை ஓரளவு குறைய லாமல்லவா!

அன்னபூரணி தங்கையின் பெண்ணிடமிருந்து தான் விலகி இருப்பதே மேல் என்று பலவிதக் காரணங்களைக் கொண்டு தீர்மானித்தாள்.

பலசாலியான பெரியவர் கரும்பைக் கடித்துச் சாற்றைச் சுவைக்கும்போது, ஏமாற்றத்துடன் அதைப் பார்க்கும் சிறுவனுக்கு ஆத்திரம் மேலுக்கு மேல் பொங்குவது இயல்பு தானே! மகேந்திரனுடைய நிலையும் அவ்வாறுதான் இருந்தது. தன் கண்ணெதிரேயே இளமை பொங்கும் புது மனைவியின் இன்பச் சுவையெல்லாம் வீட்டு வேலையிலேயே நசுக்குண்டு வீணாவதை அவனால் எவ்வாறு பொறுக்க முடியும்!

''சின்னம்மா! அம்மா தன் மருமகளை வேலை வாங்கிச் சாக அடிக்கிறாள்! என்னால் அதைப் பார்க்கவே முடியவில்லை'' என்று மகேந்திரன் அன்னபூரணியிடம் சொன்னான்.

ராஜலட்சுமி செய்வது அளவுக்கு மீறியது என்று அன்ன பூரணிக்குத் தெரியும். இருந்தாலும் அவள், ''ஏன், அப்பா! மருமகள், வீட்டு வேலை தெரிந்துகொள்வது நல்லதுதானே!

இந்தக் காலத்துப் பெண்களைப் போல, நாவல் படிப்பதும், கம்பளிச் சட்டை பின்னுவதுமாய்த் துரைசானியாக இருந்தால் நல்லதா!'' என்றாள்.

மகேந்திரனுக்கு எரிச்சலாக வந்தது. ''இந்தக் காலத்துப் பெண் இவள்; காலத்துக்கு ஏற்றபடியேதான் இருக்க வேண்டும். அது நல்லதோ, கெட்டதோ எனக்குத் தெரியாது. என் பெண்டாட்டி என்னைப்போல் நாவல் படித்து அநுபவிக்கத் தெரிந்துகொண்டாள் என்றால், அதில் ஏளனத்துக்கோ, வருத்தப்படுவதற்கோ என்ன இருக்கிறது?'' என்றான்.

அன்னபூரணியின் அறையில் பிள்ளையின் குரல் கேட்கவே, ராஜலட்சுமி தன் கைக் காரியங்களையெல்லாம் போட்டுவிட்டு வந்தாள். ''என்ன அங்கே? என்ன ஆலோசனை நடக்கிறது?'' என்று கடுமையான குரலில் கேட்டாள் அவள்.

மகேந்திரன் எரிச்சல் தணியாமலே, ''ஆலோசனை ஒன்றுமில்லை, அம்மா. என் பெண்டாட்டி வேலைக்காரிபோல் வீட்டில் உழைப்பது எனக்குப் பிடிக்கவில்லை'' என்றான்.

ராஜலட்சுமி தன் உள்ளத்தில் கொழுந்துவிடும் தீயை அடக்கிக்கொண்டு நிதானமாக, ''பின் அவளை என்ன செய்ய வேண்டுமென்கிறாய்?'' என்று கேட்டாள்.

''அவளுக்கு நான் எழுதப் படிக்கக் கற்றுத் தரப் போகிறேன்.''

ராஜலட்சுமி பதில் பேசாமல் விடுவிடென்று போய், நிமிஷத்துக்கெல்லாம் மருமகளின் கையைப் பிடித்து இழுத்து வந்து மகேந்திரனின் எதிரே நிறுத்தினாள்; ''இந்தா உன் பெண்டாட்டிக்கு படிப்புச் சொல்லிவை'' என்றாள். பின்னர், அவள் பார்வை அன்னபூரணியின் பக்கம் சென்றது. அவள் கைகூப்பி, ''அம்மா! என்னை மன்னித்துக் கொள்ளடி! உன் தங்கையின் பெண்ணுடைய அருமை எனக்குத் தெரியாமல் போயிற்று; அநியாயமாக அவள் கையைச் சிவக்க அடித்து விட்டேன்! அவளை எப்படியோ குளிப்பாட்டித் துரைசானி போல் ஆக்கி மகனின் கையிலே ஒப்படைத்துவிடு. அவள் கால்மேல் கால் போட்டுக்கொண்டு படிக்கட்டும்; நான் வேலைக் காரியாக உழைக்கிறேன்'' என்றதும் தன் அறைக்குள் சென்று தடாலென்று கதவைச் சாத்தித் தாழிட்டுக்கொண்டாள்.

அன்னபூரணி குன்றிப் போய்த் தரையில் உட்கார்ந்து விட்டாள். திடீரென்று நேர்ந்த இந்தக் குடும்பக் கலக்கத்தின் பொருள் விளங்காமல் ஆசா, கூச்சம், வருத்தம், பயம் மூன்றும் குழம்பிட முகம் வாடி நின்றாள். மகேந்திரனுக்கு உள்ளூறக் கோபம். அவன் தனக்குள், 'உம்! இனிமேல் என் பெண்டாட்டியை நான்தான் கவனித்துக்கொள்ள வேண்டும்.

இராவிட்டால் அநியாயந்தான் நடக்கும்' என்று தீர்மானித்தான்.

ஆவல் ஒரு புறமும், கடமை ஒரு புறமும் அவன் மனத்தில் போரிட்டன. தீயுடன் காற்றுக் கூடியது போலாயிற்று. கல்லூரி, பரீட்சை, நண்பர்கள், சமூகக் கூட்டங்கள் யாவும் போன இடம் தெரியவில்லை. மனைவியை முன்னுக்குக் கொண்டு வரும் முடிவுடன் அவளை அழைத்துக்கொண்டு அறைக்குள் நுழைந்தான். தன் வேலைகளைக் கவனிக்கவோ, பிறரைப்பற்றி எண்ணவோ இல்லை.

ராஜலட்சுமி பிணக்குடன், 'மகேந்திரன் பெண்டாட்டியுடன் வந்து அறைவாசலில் நின்று என்னைக் கெஞ்சினுல்கூட அவன் முகத்தைப் பார்க்கக்கூடாது. அம்மாவை விட்டுப் பெண்டாட்டியுடன் எப்படித்தான் அவனுல் இருக்கமுடியும், பார்க்கலாம்' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டாள்.

பல நாட்கள் சென்றன. குற்றம் உணர்ந்துவரும் மகேனின் காலடி ஓசை கதவருகில் கேட்கவில்லை. மன்னிப்புக் கேட்டால், மன்னித்துவிடலாம் என்று மனத்தை மாற்றிக் கொண்டாள் ராஜலட்சுமி. இல்லாவிட்டால் மகேந்திரன் உள்ளூற வேதனைப்படுவானென்று அவளுக்குத் தோன்றியது.

ஆனுல் மன்னிப்புக் கேட்கவும் அவன் வரவில்லை. ஆகவே, தாளுக வலியச் சென்று அவனை மன்னித்து விட்டதாகச் சொல்லலாம் என்ற முடிவுக்கு வந்தாள். பிள்ளை ரோஷத்துடன் இருந்தால், தாயுமா அப்படி இருப்பது?

மூன்ருவது மாடியின் ஒரு மூலையில் இருந்த சிறு அறைதான் மகேந்திரனுக்குப் படுக்கை அறை; படிக்கும் அறையும் அதுவேதான். சில நாட்களாக அவனுடைய துணிகளை மடித்து வைப்பது, படுக்கை போடுவது, அறைகளைச் சுத்தம் செய்வது எதையும் அவனுடைய தாய் கவனிக்கவில்லை. பழகிப் போன காரியங்களைக் கவனியாமல் போகவே, அவள் உள்ளம், தாய்ப்பால் அருந்தும் குழந்தை பாலுண்ணுவிட்டால் தவிப்பது போல் தவித்தது. 'மகேந்திரன் காலேஜுக்குப் போயிருப்பான். இப்போதே போய் அவன் அறையை ஒழுங்கு செய்து விட்டு வரலாம். திரும்பி வந்து அறையைப் பார்த்ததும், அம்மாவின் கைவேலைதான் என்று புரிந்துகொள்ளுவான்' என்று நினைத்து அன்று பிற்பகல் அவள் படியேறி மாடிக்குச் சென்ருள்.

மகேந்திரனின் படுக்கை அறைக் கதவு திறந்திருந்தது. அதன் முன் வந்ததும் காலில் முள் குத்தியது போல் அவள் திடுக்கிட்டு நின்ருள். கீழே படுக்கையில் மகேந்திரன் உறங்கிக் கொண்டிருந்தான். கதவுப்புறம் முதுகு காட்டி உட்கார்ந்து

ஆசா மெல்ல அவன் கால்களை வருடிக் கொண்டிருந்தாள். பட்டப்பகலில், வெட்ட வெளிச்சமாக இந்தத் தம்பதிகளின் விளையாட்டைக் கண்டு ராஜலட்சுமி கூச்சமும், வெறுப்புமீ மூண்டு ஓசைப்படாமல் கீழே இறங்கிச் சென்றாள்.

5

மழையின்றி வாடிப்போகும் பயிர், வான் துளியைப் பெற்றதுமே பல நாட்கள் பட்டினி கிடந்த சோர்வினைப் போக்கி மள மள வென்று வளரத் தொடங்கும். தலைகுனிந்து கிடந்த அந்தப் பயிர் வயலின் நடுவே கூச்சமோ தயக்கமோ இன்றித் தன் உரிமையை வெட்ட வெளிச்சமாக்கிடும். அதே போலத்தான் ஆசாவின் நிலையும் ஆகியது. இரத்தத் தொடர்பு இருந்த இடத்தில் அவளால் உறவு கொண்டாட முடிய வில்லை. இன்று பிறனுடைய இல்லத்தில் அவள் வேண்டாம லேயே நெருங்கிய தொடர்பும், சந்தேகத்துக்கே இடமிராத உரிமையும் கிடைத்தன. அன்பணைப்பு இராமல் வளர்ந்த அநாதைச் சிறுமியின் தலையில் அவள் கணவன் தன் கையால் திருமகளின் தலையணியை அணிவித்ததுமே, அவள் தனக் குரிய பெருமையையும் பதவியையும் ஏற்கத் தயங்கவில்லை. புது மருமகளுக்கு உரிய கூச்சம், பயம் இவற்றை ஒழித்துக் கண நேரத்திலேயே, நெடுநாள் பழகியவள் போல் தன் கணவனுடைய காலடியிலேயே தன் சிங்காதனத்தை அமைத் துக்கொண்டாள் ஆசா.

அன்று பிற்பகலில், அந்தச் சிங்காதனத்தில் புதிதாக வந்த அந்த அந்நியப் பெண் நெடுநாள் பழகியவள்போல் நிமிர்ந்து உட்கார்ந்திருப்பதைக் கண்டதும் ராஜலட்சுமி வியப்பு மேலிட்டுக் கீழே இறங்கிவந்தாள். அவளுடைய உள் ளத்தின் எரிச்சல் எல்லாம் அன்னபூரணியின்மேல் திரும் பியது. "அடி அம்மா! உன் தங்கை பெண் ராஜகுமாரி, பிறந்த வீட்டிலிருந்து என்ன கற்றுக்கொண்டு வந்திருக்கிறாள், போய்ப் பாரேன்! வீட்டுக்குப் பெரிய ஆண்பிள்ளைகள் இருந் தால்...." என்று பேச்செடுத்தாள்.

அன்னபூரணி பரிதாபமான குரலில், "அக்கா! உங்கள் மருமகளுக்கு நீங்கள் சொல்லிக் கொடுங்கள்; அதட்டி வழிக்குக் கொண்டு வாருங்கள். என்னை எதற்குச் சொல்லு கிறீர்கள்?" என்றாள்.

ராஜலட்சுமியின் குரல் வில்லின் நாண் ஒலிபோல் எழுந்தது. ''என் மருமகளா! நீ மந்திரியாக இருக்கும்போது இவள் என்னை மதிக்கப்போகிருளா என்ன!'' என்ருள்.

அன்னபூரணி தப்தப்பென்று கால் ஓசைப்படத் தம்பதிகளுக்குத் திகைப்பூட்டியபடி மகேந்திரனின் படுக்கை அறைக்குள் நுழைந்தாள். ''ஏனடி, எரிமூஞ்சி! என்னை அவமானத்துக்குள்ளாக்கித் தலைகுனிய வைக்கவா இங்கே வந்தாய்? வெட்கமில்லை? கூச்சமில்லை? வேளை சமயம் இல்லை? வயதான மாமியாரின்மேல் வீட்டு வேலையை யெல்லாம் சுமத்திவிட்டு, இங்கே சுகமாக இருக்கிருயா? என் தலையெழுத்து, உன்னை என் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்தேனே!'' என்று ஆசாவிடம் சொல்லும்போது அவளுடைய கண்களில் நீர் பலபலவென்று உதிர்ந்தது. ஆசாவும் தலைகுனிந்து சேலைத் தலைப்பை விரல்களில் சுற்றியவாறு நின்றுகொண்டே அழலாஞள்.

''சின்னம்மா, நீ இவளை வீணுக மிரட்டுகிருய்? நான்தானே இவளைப் பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறேன்!'' என்ருன் மகேந்திரன்.

''நீ செய்தது சரிதாஞ! இவள் சிறுமி, அநாதைப் பெண். அம்மாவிடமிருந்து இவளாகக் கற்றுக்கொண்டது ஒன்றுமே இல்லை. நல்லதும், கெட்டதும் இவளுக்கு என்ன தெரியும்! நீதான் இவளுக்கு என்ன சொல்லித் தருகிருய்?''

''இதோ பார், இவளுக்காகப் பலகை, புத்தகம், எல்லாம் வாங்கி வந்திருக்கிறேன். நான் இவளுக்கு எழுதப் படிக்கச் சொல்லித் தருவேன். அதற்காக ஊரார் பழித்தாலும் சரி, உங்களுக்குக் கோபம் வந்தாலும் சரி...''

''அது சரி, நாளெல்லாம் சொல்லித் தரவேண்டுமா! சாயங்காலமாக அரை மணி ஒரு மணி படித்தால் போதாதா?''

''அது அவ்வளவு எளிதல்ல, சின்னம்மா! படிக்கக் கற்றுக்கொள்ள நிறைய ஓய்வு வேண்டும்.''

அன்னபூரணி கசந்துபோய் அறையைவிட்டு வெளியேறிஞள். ஆசாவும் மெல்ல அவள் பின்னுலேயே போக அடி எடுத்து வைத்தாள். ஆஞல் மகேந்திரன் வாயிலின் அருகே சென்று வழி மறைத்து நின்ருன். நீர் ததும்ப நிற்கும் ஆசாவின் விழிகளில் தோன்றிய வேண்டுகோளை அவன் மதிக்கவில்லை. ''வா! தூங்கியே பொழுது வீணுகிவிட்டது. அதற்கு ஈடுசெய்யவேண்டும்'' என்ருன் அவன்.

மகேந்திரன் படிக்க வேண்டிய நேரத்தைத் தூக்கத்தில் வீணுக்கி விட்டான் என்பதை நம்பும் பெரியவர்கள் ஆழ்ந்த உலக அநுபவம் உள்ளவராஞலும் சற்று மந்தபுத்தி உடையவர்கள்தாம். அதிலும் மகேந்திரனின் மேற்பார்வையில்

கல்வி பயில்வதையும் அது நடைபெறும் விதத்தையும் எந்தக் கல்வி அதிகாரியும் ஒப்புக்கொள்ளமாட்டார் என்பதை அவர்களுக்கு எடுத்துச் சொல்வது அவசியம்.

ஆசா தன் கணவனை நம்பினாள். ஆகவே, அவள் எழுதப் படிக்கக் கற்றுக்கொள்வது தன் வரையிலும் எளிதல்ல என்றாலும் கணவனுடைய கட்டளைப்படி நடப்பது தன் கடமை என்று எண்ணினாள். ஆகவே, அமைதியின்றி அலை பாயும் மனத்தை அடக்கி, படுக்கை அறையில் தரையில் விரித்த படுக்கையின் மூலையில் உட்கார்ந்து, புத்தகத்தின்மேல் கவிந்தவாறு தலையை ஆட்டிக்கொண்டு மனப்பாடம் செய்வாள். அதே அறையின் மற்றொரு மூலையில் சிறு மேஜையின்மேல் அவளுடைய ஆசிரியன் மருத்துவக் கலைப் புத்தகம் ஒன்றை விரித்துக்கொண்டு நாற்காலியில் உட்கார்ந்திருப்பான். நடு நடுவே அவன் பார்வை மாணவியின்மேல் திரும்பும்; பாடத்தில் அவள் கவனம் செல்லுகிறதா என்று பார்க்கத்தான். சற்றைக்கெல்லாம் அவன் புத்தகத்தை மூடிவிட்டு ஆசாவை அவளுடைய செல்லப் பெயரால் அழைப்பான்: "சுனி!" ஆசா திடுக்கிட்டுத் தலை நிமிர்வாள். "புத்தகத்தைக் கொண்டுவா. எதைப் படிக்கிறாய், பார்க்கலாம்" என்பான் மகேந்திரன்.

மகேந்திரன் கேள்வி கேட்பானோ என்று ஆசாவுக்குப் பயம். ஏனென்றால், அவளுக்குப் பதில் சொல்லத் தெரியாது. பாடப் புத்தகம் எவ்வளவுதான் சுலபமாக இருந்தாலும், அவளுடைய மனம் அதில் செல்ல மறுத்தது. எழுத்துக்களைக் கற்றுக்கொள்ள அவள் பட்ட பாடு வீணாகியது. அவை அவள் கண்களுக்கு கறுப்பு எறும்புகள் வரிசையாகச் செல்வது போலவே தோன்றின.

ஆசிரியனுடைய குரலைக் கேட்டு ஆசா குற்றவாளி போல் பயந்துகொண்டே புத்தகத்துடன் நாற்காலியின் பக்கத்தில் போய் நிற்பாள். மகேந்திரன் ஒரு கையால் அவள் இடையை அழுத்தமாக அணைத்துக்கொண்டு மறு கையில் புத்தகத்தைப் பிடித்தவண்ணம், "எவ்வளவு தூரம் படித்தாய், பார்க்கலாம்!" என்பான். தன் பார்வை சென்ற இடம் வரையிலும் ஆசா காட்டுவாள். மகேந்திரன் அலட்சியமான குரலில், "உம்! இவ்வளவு படிக்க முடிந்ததா உன்னால்! நான் எவ்வளவு படித்தேன் பார்க்கிறாயா!" என்று தான் படித்த புத்தகத்தில் ஓர் அத்தியாயத்தின் தலைப்பை மட்டும் காட்டுவான். ஆசாவின் கண்கள் வியப்பினால் விரியும். "இத்தனை நேரம் என்னதான் செய்துகொண்டிருந்தீர்கள்?" என்பாள் அவள். மகேந்திரன் அவள் மோவாயைத் தொட்டுக் கொஞ்சுவான். "நான் ஒருத்தியைப்பற்றி எண்ணமிட்டுக் கொண்டிருந்தேன். ஆனால்

அந்த ஒருத்தியோ பாடப் புத்தகத்தில் பட்டுப் பூச்சியைப் பற்றிய வரலாற்றில் மனத்தைப் பறிகொடுத்திருந்தாள்.''— அநியாயமாகச் சொல்லும் இந்தக் குற்றச் சாட்டுக்குத் தக்க பதில் சொல்ல அவளால் முடியுமென்ருலும், கூச்சம் அவளைத் தடுத்துவிடும். காதல் போட்டியில் அநாவசியமாக அவள் தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டிவரும். மகேந்திரனின் பள்ளிக்கூடம் அரசாங்கத்தாரோ, தனிப்பட்டவரோ நடத்தும் பள்ளிகளைப்போல் திட்டங்களை அநுசரித்து நடக்காது என்று இதிலிருந்தே தெரிகிறதல்லவா!

ஒவ்வொரு நாள் மகேந்திரன் இல்லாத சமயம் ஆசா புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு படிக்க முயலுவாள். அந்தச் சமயம் பார்த்து மகேந்திரன் எங்கிருந்தோ வந்து அவள் கண்களைப் பொத்துவான். பிறகு புத்தகத்தை அவள் கையிலிருந்து பிடுங்குவான். ''நீ மிகவும் பொல்லாதவள். நான் இராவிட்டால், என்னைப்பற்றிய நினைவே வராமல், புத்தகம் படிக்கிருயா?'' என்பான்.

''என்னை முட்டாளாக்க வேண்டுமா?'' என்பாள் ஆசா.

''உன் புண்ணியத்திலே, என் படிப்புமட்டும் எவ்வளவு முன்னேறியிருக்கிறதாம்!''

இந்தச் சொல் எதிர்பாராத முறையில் ஆசாவை வருத்தியது. சட்டென்று அங்கிருந்து அவள் போக முயன்ருள்; "உங்கள் படிப்புக்கு நான் தடையாக இருக்கிறேனு?" என்ருள்.

மகேந்திரன் அவளுடைய கையைப் பிடித்துக்கொண்டான். ''அது உனக்கு எங்கே தெரியப்போகிறது! என்னை விட்டுப் பிரிந்தால் உன்னுல் சகஜமாகப் படிக்க முடிகிறது. ஆனுல் என்னுல் அத்தனை சுலபமாகப் படிக்க முடிவதில்லையே!'' என்ருன்.

பெரிய குற்றச் சாட்டுத்தான். இதன் பின்னர் இலையுதிர் காலத்தில் பெய்யும் மழைபோல் ஒரு சாரல் அழுகை தோன்றும். சற்று நேரத்துக்கெல்லாம் பளிச்சென்று கதிரவன் ஒளி போல் கொஞ்சும் மொழிகள் தோன்றி மறையும்.

ஆசிரியனே கல்விக்குத் தடையாக நின்ருல், அபலையான மாணவி கல்விக் கடலை எப்படிக் கடக்க முடியும்? நடு நடுவே பெரியம்மாவின் கடூரமான மொழிகள் நினைவுக்கு வந்து அவள் மனத்தை வாட்டும். படிப்பது என்பது ஒரு சாக்கு என்று அவளுக்குப் புரிந்தது. அதனுல் மாமியாரைக் கண்டால் வெட்கத்தால் புழுங்கிச் சாவாள். ஆனுல் மாமியாரோ அவளை ஒரு வேலையும் செய்யச் சொல்லுவதில்லை. புத்திமதியும் சொல்லுவதில்லை. எப்போதாவது ஆசா தானுகவே மாமியாருக்கு வீட்டு வேலையில் உதவச் சென்ருல், அவள் பரபரப்புடன், ''என்ன

அம்மா இது! போ, படுக்கை உள்ளுக்குப் போ! உன் பாடம் கெட்டுவிடப் போகிறது!'' என்பாள்.

கடைசியில் அன்னபூரணி ஒரு நாள் ஆசாவிடம், ''நீ படிக்கிற லட்சணந்தான் நன்ருகத் தெரிகிறதே! மகேனேக்கூட டாக்டர் பரீட்சைக்குப் படிக்க விடமாட்டாய் போல் இருக்கிறது!'' என்ருள்.

இதற்குப்பின் ஆசா மனத்தைத் திடப்படுத்திக் கொண்டாள். மகேனிடம், ''நீங்கள் பரீட்சைக்குப் படிக்க வேண்டாமா! நான் இன்றுமுதல் கீழே பெரியம்மாவிடம் ப்டுத்துக் கொள்ளுகிறேனே!'' என்ருள் ஆசா.

இந்தச் சிறு வயதில் இவ்வளவு கடுமையான துறவா! படுக்கை அறையிலிருந்து ஒரேயடியாகப் பெரியம்மாவின் அறையினுள் மறைந்து வாழ்வதா! இந்தக் கடுமையான சபதத்தை எடுத்துச் சொல்லுவதற்குள் அவள் விழிக் கோணத்தில் நீர் ததும்பியது; உதடுகள் துடித்தன. நெஞ்சு உலர்ந்தது.

''நல்லது, வா! சின்னம்மாவின் அறைக்கே போய் விடலாம்'' என்ருன் மகேந்திரன்.

இவ்வளவு யோசித்து, கஷ்டப்பட்டுத் தான் கூறிய சொற்கள் இவ்வாறு கேலிப் பேச்சாகப் போனது கண்டு ஆசாவுக்குக் கோபம் மூண்டது. ''அதைவிட ஒன்று செய். நான் பரீட்சைக்குப் படிக்கிறேஞ, இல்லையா என்று நீயே இராப் பகலாக என்னைக் கண்கொட்டாமல் கவனித்துக்கொள்'' என்ருன் மகேந்திரன்.

எளிதாகவே இந்த விஷயம் முடிவாகியது. ஆனுல் கண் கொட்டாமல் கவனிக்கும் காரியம் எவ்வாறு நடந்தது என்பதை விவரமாகக் கூறவேண்டிய அவசியமில்லை. அந்த ஆண்டு மகேந்திரன் பரீட்சையில் தவறிவிட்டான் என்று சொன்னுலே போதும். ஆசாவின் படிப்பும் முதல் பாடத்தைத் தாண்டி முன்னேற்றம் அடையவில்லை.

இந்த அபூர்வமான படிப்பும் போதனையும் முற்றும் இடையூறின்றி நடந்தேறின வென்று சொல்ல முடியாது. விஹாரி நடுநடுவே வந்து அலைகளைக் கிளப்பிவிட்டுச் செல்வான். ''மகேன் அண்ணு!'' என்று அவன் கூப்பிடுவது ஊர் முழுவதும் கேட்கும். மகேந்திரனைப் படுக்கை அறையிலிருந்து வெளியே இழுக்காமல் அவன் விடமாட்டான். படிப்பில் கவனம் குறைவதுபற்றி மகேந்திரனை அவன் மிகவும் கோபித்துக் கொண்டு மிரட்டுவான். ''மன்னி! விழுங்கினுல் எதுவும் சரிக்காது; மென்று தின்னவேண்டும். முழுச் சோற்றை விழுங்குகிருய்; அப்புறம் ஜீரணத்துக்கு மாத்திரை கிடைக்காது'' என்று அவன் ஆசாவிடம் சொல்லுவான்.

''சுனி! இவன் சொல்வதை ஏதோ பெரிதாக எண்ணாதே! நாம் சுகமாக இருப்பது கண்டு இவனுக்குப் பொறாமை!'' என்பான் மகேந்திரன்.

''சுகமென்னவோ உன் கையில்தான் இருக்கிறது. பிறருக்குப் பொறாமை ஏற்படாத முறையில் அதை அநுபவிப்பது தானே?''

''பிறர் பொறாமைப்படுவதே சந்தோஷம் தரும் விஷயமாயிற்றே, சுனி! கொஞ்சம் தயங்கியிருந்தால் கழுதையைப் போல் நான் உன்னை விஹாரியின் கையில் சிக்க விட்டிருப்பேன்!''

விஹாரியின் முகம் சிவந்தது. ''கம்மென்றிரு!'' என்றான்.

இந்த நிகழ்ச்சிகளால் ஆசாவின் மனம் விஹாரியை வெறுக்கத் தொடங்கியது. விஹாரிக்குத் தன்னைக் கொடுப்பதாகப் பேச்சு இருந்தது என்பதனாலேயே ஆசாவுக்கு விஹாரியின்மேல் வெறுப்பு உண்டு. இது விஹாரிக்கும் தெரியும். மகேந்திரன் இதை வைத்துக்கொண்டே பொழுது போக்குவான்.

ராஜலட்சுமி விஹாரியை அழைத்துத் தன் மன வேதனையை வெளியிடுவாள். ''அம்மா! புழு தன்னைச் சுற்றிக் கூடு கட்டிக்கொள்ளும்போது பயம் ஒன்றுமில்லை. ஆனால் கூட்டைப் பிளந்துகொண்டு பறந்துவிட்டால், அதைத் திரும்பக் கொண்டுவருவது கஷ்டந்தான். அவனும் உன் பாசத்தை இப்படி அறுத்தெறிவான் என்று யார் நினைத்தார்கள்!'' என்றான் விஹாரி.

மகேந்திரன் பரீட்சையில் தவறியது கேட்டுக் கோடைத் தீயைப்போல் கொதித்தாள் ராஜலட்சுமி. ஆனால் தீச்சுடர் போன்ற அவளுடைய மிரட்டல்களை அன்னபூரணிதான் முற்றும் தாங்கவேண்டி வந்தது. பாவம்! அன்னபூரணி ஊண் உறக்கத்தைத் துறந்தாள்.

6

மழைக் காலத் தொடக்கம். அன்று சாயங்காலம் மழையும் மப்புமாக இருந்தது. உடலில் வாசனை தடவிய அங்கவஸ்திரமும், கழுத்தில் மல்லிகைப் பூ மாலையுமாக மகேந்திரன் உள்ளம் பொங்கும் களிப்புடன் படுக்கை அறையினுள் நுழைந்தான். ஆசாவை எதிர்பாராதபடி திடுக்கிடச் செய்யவேண்டும் என்று செருப்பொலி எழாவண்ணம் அவன் நடந்தான். உள்ளே எட்டிப் பார்த்தபோது கீழண்டைப் பக்கம் திறந்த சாளரத்தினூடே மழைச் சாரலுடன் காற்று உள்ளே அடித்துக்கொண்டிருந்தது. காற்றில் விளக்கு அணைந்துவிட்டது. ஆசா கீழே படுக்கையில் படுத்து விம்மி விம்மித் தெளிவற்ற குரலில் அழுது கொண்டிருந்தாள்.

மகேந்திரன் வேகமாக அவள் அருகில் வந்தான். ''என்ன நடந்தது?'' என்றான்.

அவள் பின்னும் மிகுதியாக அழத் தொடங்கினாள். வெகு நேரம் பொறுத்து மகேந்திரனின் கேள்விக்குப் பதில் கிடைத்தது. பொறுக்க முடியாமல் அவளுடைய பெரியம்மா தன் அத்தை பிள்ளையின் வீட்டுக்குச் சென்றுவிட்டதுதான் அவளுடைய அழுகைக்குக் காரணம்.

மகேந்திரனுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. ''போனவள், இப்படி மழை பொழியும் மாலை வேளையை மண்ணாக அடித்துவிட்டுப் போகவேண்டுமா!'' என்று அவன் தனக்குள் சொல்லிக்கொண்டான்.

கடைசியில் கோபமெல்லாம் தாயின்மேல் விரைந்தது. அவள்தானே இந்தக் குழப்பத்துக்கெல்லாம் மூல காரணம்!

''சின்னம்மா போன இடத்துக்கே நாமும் போகலாம். இந்த அம்மா யாருடன் சண்டை போடுவாளோ பார்க்கலாம்'' என்று மகேந்திரன் காரணமின்றி மூட்டை கட்டுவதும் கூலியை அழைப்பதுமாகக் கூச்சலைக் கிளப்பினான்.

ராஜலட்சுமிக்கு முழு விவரமும் விளங்கியது. அவள் மெல்ல மகேந்திரனை அணுகி அமைதியான குரலில், ''எங்கே போகிறாய்?'' என்றாள்.

முதலில் மகேந்திரன் மறுமொழி ஏதும் கூறவில்லை. அவள் இரண்டு மூன்று தடவை கேட்டபின், ''சின்னம்மாவிடம் போகிறேன்'' என்றான்.

''நீங்கள் எங்கேயும் போகவேண்டாம். உன் சின்னம்மாவை நானே அழைத்து வந்துவிடுகிறேன்'' என்று ராஜலட்சுமி வெளியேறி அன்னபூரணியின் வீட்டுக்குச் சென்றாள்.

கழுத்தைச் சுற்றி மேல் தலைப்பைப் போட்டுக்கொண்டு கை கூப்பி அவள் அன்னபூரணியிடம், ''அம்மா! என்னை மன்னித்து விடு; சற்று முகம் பாரடியம்மா'' என்றாள்.

அன்னபூரணி பரபரப்புடன் எழுந்து ராஜலட்சுமியின் காலைத் தொட்டு வணங்கினாள். பிறகு இறைஞ்சும் குரலில், ''அக்கா! திரும்பத் திரும்ப ஏன் என்னை இப்படிக் குற்றவாளி ஆக்குகிறாய்! நீ என்ன சொல்லுகிறாயோ, அதைச் செய்ய வேண்டியதுதானே என் கடமை!'' என்றாள்.

''நீ இங்கே வந்துவிட்டாய் என்று என் பிள்ளை, மருமகள் இருவரும் வீட்டை விட்டுக் கிளம்புகிறார்கள்'' என்று சொல்லும்போது ராஜலட்சுமி ரோஷம், பிணக்கு, வெறுப்பு மூன்றும் சேர, அழுதே விட்டாள்.

ஒரகத்திமார் இருவருமாக வீடுவந்து சேர்ந்தார்கள். அப்போதுகூட மழை விடவில்லை. அன்னபூரணி மகேந்திரனின் அறைக்குள் சென்றபோது, ஆசாவின் அழுகை அடங்கியிருந்தது. மகேந்திரன் அவளுக்குக் களிப்பூட்டப் பல விதமாகப் பேசிக்கொண்டிருந்தான். கார் காலத்தின் அந்திப்பொழுது முழுவதும் வீணாகாது என்று தோன்றியது.

''ஏனடி சுனி! வீட்டிலும் இருக்க விடமாட்டாய்; வெளியே போனாலும் கூடவே ஒட்டிக்கொள்ள வருகிறாய்! எனக்கு எங்கேயுமே அமைதி கிடையாது!'' என்றாள் அன்னபூரணி.

எதிர்பாராது தாக்குண்ட மான் போல் ஆசா திடுக்கிட்டாள்.

மகேந்திரனுக்கு வெறுப்பு மேலிட்டது. ''ஏன் சின்னம்மா, சுனி உன்னை என்ன செய்தாள்?'' என்றான் அவன்.

''வீட்டு மருமகள் இப்படி வெட்கம் கெட்டு இருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. அதனால்தான் பார்க்கச் சகிக்காமல் வெளியே போனேன். மாமியாரை அழவிட்டு என்னைப் பிடித்து வருவானேடி, எரிமூஞ்சி!'' என்றாள் அன்னபூரணி.

வாழ்க்கையின் கவிதைச் சுவைக்குத் தாயும், சிற்றன்னையும் இப்படி இடையூறு செய்வார்கள் என்று மகேந்திரனுக்குத் தெரியாது.

மறு நாள் ராஜலட்சுமி விஹாரியை அழைத்தாள். ''அப்பா! நீ மகேனிடம் சொல்லு. ஊருக்குப் போய் வெகு காலமாகிறது. நான் பாராஸத் போகவேண்டும்'' என்றாள்.

''இத்தனை காலம் போகாமல் இருந்துவிட்டீர்கள். இனி மேல் போகாவிட்டால்தான் என்ன! எதற்கும் நான் மகேன் அண்ணாவிடம் சொல்கிறேன். ஆனால் அவன் ஒப்புக்கொள்வான் என்று எனக்குத் தோன்றவில்லை'' என்றான் விஹாரி.

"பிறந்த இடம். பார்க்கவேண்டுமென்று ஆசை உண்டாவது இயல்புதான். ஆனால் அம்மா அங்கே தங்குவது நல்லதல்ல, மழைக் காலத்துக்கு அந்த இடம் அவ்வளவு ஏற்றதல்ல'' என்றான் மகேந்திரன்.

மகேந்திரன் இத்தனை சுலபமாக ஒப்புக்கொண்டது விஹாரிக்கு வெறுப்பூட்டியது. "அம்மா ஒன்றியாகச் சென்றால், யார் அவளைக் கவனித்துக்கொள்வது? மன்னியையும் கூட அனுப்பு'' என்று விஹாரி சற்றுப் புன்னகையுடன் சொன்னான்.

விஹாரியின் இந்த மறைமுகத் தாக்குதலைக் கேட்டதும் மகேந்திரனுக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது. "என்னால் அது முடியாதா!'' என்பதற்குமேல் அவனால் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

விஹாரி இவ்வாறுதான் ஆசாவின் மனத்தைத் திருப்பி விடுவான். ஆசாவுக்குத் தன்மேல் வெறுப்பு என்று தெரிந்து ஒருவிதமான வறண்ட களிப்பும் அவன் உள்ளத்தில் பிறக்கும்.

ராஜலட்சுமிக்குத் தன் பிறந்த ஊரைப் பார்க்க வேண்டுமென்று அவ்வளவு ஆவல் இல்லை. கோடையில் ஆற்றுவெள்ளம் குறையும்போது, படகோட்டி கோலை விட்டு எங்கு எவ்வளவு ஆழம் என்று பரிசீலனை செய்வதுபோல், ராஜலட்சுமியும் இடம் மாறினால் தனக்கும் தன் மகனுக்கும் உள்ள உறவு எம்மட்டில் இருக்கிறது என்பதைத்தான் ஆராய முனைந்தாள். பாராஸத்துக்குச் செல்வது என்பது இவ்வளவு எளிதில் முடிவாகிவிடும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. 'அன்னபூரணி வீட்டை விட்டுச் செல்வதும், நான் போவதும் வேறு வேறுதான். அதிலும் வித்தியாசம் இருக்கிறது. அவள் மந்திரம் தெரிந்த ராட்சசி. நான் வெறும் அம்மாதானே! நான் போவது மேல்தானே' என்று அவளுக்குத் தோன்றியது.

அன்னபூரணிக்கு இந்த உட்கருத்துத் தெரிந்தது. அவள் மகேந்திரனிடம் சென்றாள். "அக்கா போவதானால் என்னால் இங்கு இருக்கமுடியாது'' என்றாள்.

மகேந்திரன் தாயிடம் சென்றான். "கேட்டாயா, அம்மா! நீ போனால் சின்னம்மாவும் போய்விடுவாளாம். அப்படியானால் நம் வீட்டு வேலைகள் எப்படி நடக்கும்?'' என்றான்.

பொறாமையும் பகைமையும் விஷம்போல் ராஜலட்சுமியைத் தாக்கின. "நீ போகிறாயா! அது எப்படி முடியும்? நீ போய்விட்டால் நடக்குமோ! நீ இருக்கத்தான்வேண்டும்'' என்றாள் அவள்.

அதற்குமேல் அவளால் தாமதிக்க முடியவில்லை. மறுநாள் பிற்பகலே அவள் ஊருக்குச் செல்லத் தயாரானாள். மகேந்திரனே அவளை ஊரில் கொண்டு விட்டு வருவான்

என்று விஹாரியும் மற்றவர்களும் நினைத்தார்கள். ஆனால் போகும் வேளை வந்ததும் மகேந்திரன் ஒரு காரியஸ்தரையும் வேலைக்காரனையும் மட்டும் அவளுடன் அனுப்ப ஏற்பாடு செய்திருப்பது தெரிந்தது.

''மகேன்! நீ இன்னும் தயாராகவில்லையா!'' என்றான் விஹாரி.

மகேந்திரன் கூச்சத்துடன், ''எனக்குக் காலேஜுக்கு..'' என்று தயங்கினான்.

''சரி, நீ இரு. நானே அம்மாவைக் கொண்டு விடுகிறேன்'' என்றான் விஹாரி.

மகேந்திரனுக்கு உள்ளூறக் கோபம். அவன் தனிமையில் ஆசாவிடம், ''வரவர விஹாரியின் செய்கை வெகு தூரத்துக்குப் போகிறது. அம்மாவைப்பற்றி என்னைவிட அவனுக்குத்தான் மிகவும் கவலை என்று காட்டிக்கொள்கிறான்!'' என்று குறை சொல்லிக்கொண்டான்.

அன்னபூரணி தங்கவேண்டியதாயிற்று. ஆனால் வெட்கம், ரோஷம், வெறுப்பு இவை அவளைத் தலைதூக்க விடாமல் செய்தன. சிற்றன்னை இவ்வாறு ஒதுங்கியிருப்பது மகேந்திரனுக்குப் பிடிக்கவில்லை. ஆசாவும் உள்ளூறப் பொருமினாள்.

7

ராஜலட்சுமி தன் பிறந்த ஊரை அடைந்தாள். அவளைக் கொண்டுவிட்டு வருவதாகத்தான் இருந்தான் விஹாரி. ஆனால் அங்கு இருந்த நிலைமை அவனைத் திரும்ப விடவில்லை.

ராஜலட்சுமியின் பிறந்த வீட்டில் வயதான கிழவிகள் இரண்டொருவர் மட்டுமே உயிருடன் இருந்தனர். நாற்புறமும் அடர்ந்த காடுகளும், மூங்கில் புதர்களும் இருந்தன. குளத்தில் தண்ணீர் பாசிபிடித்துக் கிடந்தது. பட்டப் பகலிலேயே நரிகள் ஊளையிடுவது ராஜலட்சுமிக்கு அருவருப்பைத் தந்தது.

''அம்மா! பிறந்த ஊர் என்றாலும் சொர்க்கம் என்று சொல்லமுடியாது. வாருங்கள், கல்கத்தாவுக்கே சென்று விடலாம். உங்களை இங்கே விட்டுச் செல்வது என் வரையில் நியாயம் ஆகாது'' என்றான் விஹாரி.

ராஜலட்சுமிக்கும் போதுமென்றுதான் ஆகிவிட்டது. இந்தச் சமயத்தில்தான் விநோதினி அங்கு அவளுக்குத் துணையாக வந்து தனக்கும் இருப்பிடம் தேடிக்கொண்டாள்.

விநோதினியைப்பற்றி முதலிலேயே அறிமுகம் செய்து வைத்தாயிற்று. ஒரு. காலத்தில் மகேந்திரனுக்கும், அவனுக்குப் பின் விஹாரிக்கும் அவளை மணம் செய்து வைக்கும் பேச்சு நடந்தது தெரியும். விதியின் வலிமை, அவளுக்கென்று வாய்த்த வரனின் உடலில் காலஆஸார்க் கட்டிதான் வலிமை பெற்று விளங்கியது! அதனுடன் நடத்திய போராட்டத்தில் நீண்ட காலம் அவனால் உயிருடன் இருக்க முடியவில்லை.

அவன் காலமானபின், காட்டின் நடுவே ஒரு பூங்கொடி போல், விநோதினி அழுது வடியும் அந்தப் பட்டிக்காட்டில் மனம் வாடி நாட்களைக் கழிக்கலானாள். இப்போது தன் தொலைவான உறவு முறை மாமியாரிடம் வந்து அவள் தாழ்ந்து வணங்கினாள். ராஜலட்சுமிக்குத் தொண்டு புரிவதையே அவள் தன் பணியாகக் கொண்டாள்.

பணிவிடை என்றால் இதுதான் என்று சொல்லலாம்! ஒரு கணம் ஓய்வு இல்லை. துடைத்துவிட்டாற்போல் ஒழுங்கான காரியங்கள்; வாய்க்குச் சுவையான அமுது; பேச்சு வார்த்தைகளில் ஓர் இனிமை!

''பொழுது போகிறது; நீ போய்க் கொஞ்சம் சாப்பிடு'' என்றாள் ராஜலட்சுமி. அவள் அதைக் கேட்டால்தானே! அத்தைக்கு விசிறிவிட்டு அவள் தூங்கிய பின்னரே விநோதினி எழுந்திருப்பாள்.

''இப்படியெல்லாம் செய்தால் நீ உடம்புடன் படுத்துக் கொள்வாயே, அம்மா!'' என்பாள் ராஜலட்சுமி.

விநோதினி தன் உடம்பைப்பற்றி அவ்வளவு அக்கறை காட்டிக்கொள்ள மாட்டாள். ''கஷ்டப்படுவதற்கென்றே பிறந்தது இந்த உடம்பு, அத்தை. என் உடம்புக்கு ஒன்றும் வராது. பாவம்! எத்தனை நாட்களுக்குப் பிறகு, பிறந்த ஊருக்கு வந்திருக்கிறீர்கள்! இங்கே என்ன இருக்கிறது, உங்களுக்கு நல்லதாகச் செய்துபோட!'' என்பாள் அவள்.

விஹாரி இரண்டே நாட்களில் ஊருக்கு ஏற்ற தலைவனாகி விட்டான். நோய்க்கு மருந்து கேட்கச் சிலர், வழக்கு விஷயமாக ஆலோசனை கேட்கச் சிலர், பிள்ளைக்கு வேலை தேடிக் கொடுக்கச் சிலர், வேலைக்கு மனு எழுதிக்கொள்ளச் சிலர் - இப்படி அவனை எல்லாரும் பிடித்துக்கொண்டார்கள். கிழவர்களின் சீட்டு, சதுரங்கக் கச்சேரி முதல், பள்ளர்களின் கள்ளுக்கடைக் கூட்டம் வரையில்* எங்கும் முகமலர்ச்சியுடனும் இயல்பான அன்புடனும் பழகுவான். அவனை எவரும் வெளிமனிதனாகக் கருதுவதில்லை. அவன்மேல் எல்லோருக்கும் ஓரளவு மரியாதையும் இருந்தது.

இடமாறுதலால் தடுமாறும் கல்கத்தா இளைஞனுடைய

இந்த 'நாடு கடத்தல்' தண்டனையின் கடுமையை விநோதினி அந்தப்புரத்தின் மறைவிலிருந்து கூடியவரையில் குறைக்க முயன்றாள். ஒவ்வொரு முறையும் விஹாரி ஊர் சுற்றிவிட்டு வரும்போதும், அவன் அறை துப்புரவாக இருக்கும். பித்தளைச் செம்பு ஒன்றில் நாலைந்து பூக்களையும் இலைகளையும் செருகி வைத்திருப்பாள். படுக்கையின் அருகில் பங்கிம் சந்திரர், தீன பந்து இவர்களின் நூல்களை ஒழுங்காக அடுக்கி வைத்திருப்பாள். புத்தகங்களின் உள் அட்டையில் பெண்பாலின் கை எழுத்தில் ஒழுங்காக விநோதினியின் பெயர் எழுதியிருக்கும்.

நாட்டுப்புறத்தில் வழக்கமாக விருந்தாளிகளை உபசரிக்கும் முறைக்கும் இதற்கும் வேற்றுமை இருந்தது. விஹாரி இதை எடுத்துப் புகழ்ந்து சொல்லும்போது ராஜலட்சுமி, ''இந்தப் பெண்ணை நீங்கள் வேண்டாமென்றீர்களே!'' என்பாள்.

விஹாரி சிரிப்பான். ''நான் ஏமாந்து விட்டேன், அம்மா! நான் செய்தது சரியல்ல. ஆனால் கல்யாணம் செய்துகொள்ளாமல் ஏமாந்தது மேல். கல்யாணம் செய்துகொண்டு மோசம் போனால்தானே கஷ்டம்'' என்றான்.

ராஜலட்சுமிக்கு உள்ளூற மனம் அலை பாயும். 'இந்தப் பெண்ணே எனக்கு மருமகளாக வாய்த்திருக்கலாம். ஏனோ இப்படியாகிவிட்டதே!' என்று எண்ணுவாள்.

கல்கத்தாவுக்குத் திரும்பும் பேச்சை ராஜலட்சுமி எடுக்கும்போதெல்லாம் விநோதினியின் விழிகளில் நீர் வந்துவிடும். ''அத்தை! நீங்கள் ஏன் இந்தச் சில நாட்களைக் கழிக்க இங்கு வந்தீர்கள்? உங்களைப்பற்றித் தெரியாமல் இருந்தபோது எப்படியோ காலங் கழித்துவிட்டேன். இப்போது எப்படி நான் உங்களைவிட்டு இருப்பேன்!'' என்பாள் அவள்.

உள்ளத்தின் ஆர்வத்தை அடக்கமுடியாமல் ராஜலட்சுமி, ''ஏனோ நீ எனக்கு மருமகளாக வாய்க்கவில்லை! என் இதயத்துள்ளே உன்னை வைத்திருப்பேனே!'' என்பாள். அதைக் கேட்டதும் விநோதினிக்குக் கூச்சம் வரும். ஏதோ சாக்கிட்டு அங்கிருந்து எழுந்து சென்றுவிடுவாள்.

கல்கத்தாவிலிருந்து கெஞ்சலும் வேண்டுதலுமாகக் கடிதம் வரும் என்று ராஜலட்சுமி எதிர்பார்த்தாள். மகேந்திரன் இதுவரையில் தாயைப் பிரிந்து இத்தனை நாட்கள் இருந்ததில்லை; தாயின் பிரிவு இதற்குள் அலைக்கழித்திருக்கும் என்று அவள் நினைத்தாள். ரோஷமும் பழைய பிடிவாதமும் கலந்து தன் மகன் தனக்கு எழுதுவான் என்று காத்துக் கிடந்தாள்.

விஹாரிக்கு மகேந்திரன் எழுதியிருந்த கடிதத்தில், ''பல நாட்கள் கழிந்தபின் பிறந்த வீடு போய் அம்மா சுகமாக இருப்பாள் என்று நம்புகிறேன்'' என்றே ஒரு வரி இருந்தது.

'மகேந்திரன் இதுமாதிரி ரோஷத்துடன்தான் எழுதியிருப்பான். சுகமாக இருக்கிறேனு! மகேனை விட்டுத் துரதிருஷ்டசாலியான நான் எங்கேதான் சுகமாக இருக்க முடியும்?' என்று ராஜலட்சுமிக்குத் தோன்றியது.

''அப்பா விஹாரி! அப்புறம் மகேன் என்ன எழுதியிருக்கிறுன்! படித்துச் சொல்லு.''

''அவ்வளவுதான். அதற்குமேல் ஒன்றுமில்லை. அம்மா!'' என்று விஹாரி கடிதத்தைக் கசக்கிப் புத்தகம் ஒன்றினுள் வைத்து அறையின் ஒரு மூலையில் ஏறிந்தான்.

ராஜலட்சுமியினுல் நிம்மதியாக இருக்க முடியவில்லை. அம்மாவின்மேல் கோபத்துடன் மகேன் ஏதாவது எழுதியிருப்பான்; அதனுல்தான் விஹாரி அதைப் படிக்கவில்லை என்று அவள் நினைத்தாள்.

கன்று தாயின் மடியில் முட்டிப் பாலையும் தாயின் அன்பையும் பெறுகிறது. அதைப்போல் மகேந்திரனுடைய கோபம் ராஜலட்சுமியைத் தாக்கி அடைபட்டுக் கிடந்த தாய்ப் பாசத்தைப் பீறிடச் செய்தது. அவள் மனமார மகேந்திரனை மன்னித்துவிட்டாள். ''மனைவியோடு மகேன் சுகமாக இருக்கிறுன்; மிகவும் சந்தோஷம்! எப்படியோ அவன் நன்ருக இருந்தால் போதும். பெண்டாட்டியைப்பற்றி அவனை இனிமேல் நான் ஒன்றும் குறைகூறப் போவதில்லை. ஒரு மணி நேரங்கூடப் பிரியாத அம்மா கிளம்பிவிட்டாளென்று அவனுக்குக் கோபம்'' என்ருள் அவள். இதைச் சொல்லும்போது அவள் கண்களில் நீர் துளித்தது.

அன்று ராஜலட்சுமி விஹாரியிடம் பல தடவை வந்து, ''போடா, போய்க் குளி. இங்கே வேளைக்கு என்ன கிடைக்கிறது! ஒன்றுமே சரிவர நடக்கவில்லை'' என்ருள்.

அன்று விஹாரிக்கும் குளிப்பு, உணவு எதன்பேரிலும் மனம் செல்லவில்லை, ''அம்மா! என்னைப் போன்ற துரதிருஷ்டசாலிகளுக்கு வேளை என்ன, நியமம் என்ன!'' என்ருன் அவன்.

''போடா, போய்க் குளி'' என்று ராஜலட்சுமி வற்புறுத்திஞள். பல தடவை தூண்டிய பின்னர் விஹாரி குளிக்கச் சென்ருன். அவன் அறையை விட்டுச் சென்றதும் ராஜலட்சுமி புத்தகத்தினுள்ளிருந்து கடிதத்தைப் பரபரவென்று எடுத்து வைத்துக்கொண்டாள்.

ராஜலட்சுமி அதை விநோதினியிடம் எடுத்துச் சென்

ருள். ''இதைப் பாரம்மா! மகேன் விஹாரிக்கு என்ன எழுதியிருக்கிருன்!'' என்ருள்.

விநோதினி படித்துச் சொன்னுள். மகேந்திரன் முதலில் தாயைப்பற்றி எழுதியிருந்தான். அதிகமாக ஒன்றுமில்லை. விஹாரி படித்துச் சொன்ன அளவுதான். அதற்குமேல் ஒன்றும் எழுதவில்லை. அதன் பின்னர்க் காதல், களிப்பு இவை மீறிக் காமவெள்ளத்தில் மூழ்கிப்போய் ஆசாவைப்பற்றி எழுதியிருந்தான் மகேந்திரன்.

விநோதினி கொஞ்சம் படித்ததும் கூச்சத்துடன் நிறுத்திக் கொண்டாள். ''அத்தை! இதெல்லாம் நீ எதற்குக் கேட்க வேண்டும்?'' என்ருள்.

மகன் கடிதத்தில் எழுதியிருப்பதை அறிய ஆவலுடனும் அன்புடனும் எதிர்பார்த்த அவள் முகம் கணப்பொழுதில் பாறைபோல் கடினமானது. சற்று நேரம் சும்மா இருந்தபின் அவள், ''கிடக்கிறது!'' என்று கடிதத்தை வாங்கிக்கொள்ளாமலே எழுந்து சென்ருள்.

விநோதினி அந்தக் கடிதத்தை எடுத்துக்கொண்டு தன் அறைக்குச் சென்ருள். உள்புறம் கதவைத் தாழிட்டுக் கொண்டு படுக்கையில் படுத்தவாறு கடிதத்தைப் படித்தாள்.

கடிதத்தில் என்ன சுவை இருந்ததோ அது விநோதினிக்குத்தான் தெரியும்! ஆனுல் அது களிப்புச் சுவை அல்ல. படிக்கப் படிக்க அவள் கண்கள் இரண்டும் வெயிலில் சுட்ட மணல்போல் எரியத் தொடங்கின. பாலைக் காற்றைப்போல் அவள் பெருமூச்சில் அனல் எழுந்தது.

மகேந்திரன், ஆசா, அவர்கள் காதல் - இவையே அவள் மனத்தினுள் சுழன்றன. கடிதத்தை மடியில் வைத்துக் கொண்டு, கால்களைச் சுவரின்மேல் தூக்கி வைத்தவாறு அவள் எதிரே வெற்று நோக்குடன் உட்கார்ந்திருந்தாள்.

மகேந்திரனுடைய அந்தக் கடிதம் தேடிப் பார்த்தும் விஹாரிக்குக் கிடைக்கவில்லை.

அன்று பகல் அன்னபூரணி திடுமென்று அங்கு வந்து சேர்ந்தாள். ஏதாவது கெட்ட சமாசாரம் வருமோ என்று ராஜலட்சுமியின் மனம் படபடத்தது. அவளால் ஒன்றுமே கேட்க முடியவில்லை. முகம் வெளுத்து அவள் அன்னபூரணியையே நோக்கினுள்.

''அக்கா! கல்கத்தாவில் எல்லோரும் சௌக்கியந்தான்'' என்ருள் அன்னபூரணி.

''பின், நீ இங்கு எதற்கு வந்தாய்?'' என்ருள் ராஜலட்சுமி.

''அக்கா! உங்கள் குடும்பப் பொறுப்பை நீங்களே எடுத்

துக் கொள்ளுங்கள். எனக்கு இனிமேல் குடும்பத் தொல்லையில் மனம் செல்லவில்லை. காசிக்குப் போகும் எண்ணத்துடன் நான் யாத்திரை கிளம்பிவிட்டேன். அதனால்தான் உங்களைப் பார்த்து நமஸ்காரம் பண்ணிவிட்டுப் போகவந்தேன். தெரிந்தோ, தெரியாமலோ உங்களுக்கு நான் எத்தனையோ தவறுகள் செய்திருப்பேன். என்னை மன்னித்து விடுங்கள், உங்கள் மருமகள்.. (இதைச் சொல்லும்போது அவளுடைய கண்கள் நீரை உகுத்தன.) அவள் குழந்தை. அவளுக்குத் தாய் இல்லை. அவள் குற்றவாளியோ, இல்லையோ நீங்கள்தாம் இனி அவளுக்கு எல்லாம்....'' இதற்குமேல் அன்னபூரணியினால் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

ராஜலட்சுமி பரபரப்புடன் அன்னபூரணி குளிக்கவும் சாப்பிடவும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய முனைந்தாள். கதாயி கோஷின் சண்டீ மண்டபத்தில் இருந்த விஹாரி இந்த விஷயம் தெரிந்ததும் ஓட்டமாக வந்தான். அன்னபூரணியை வணங்கி அவன், ''சின்னம்மா! இதென்ன? எங்களை ஒரேயடியாகத் துறந்துவிட்டுப் போய் விடுகிறீர்களாமே!'' என்றான்.

அன்னபூரணி கண்ணீரை அடக்கிக்கொண்டாள். ''என்னைத் தடுக்காதே, அப்பா, விஹாரி! நீங்கள் சுகமாக இருங்கள், எனக்காக ஒன்றும் நிற்காது'' என்றாள்.

விஹாரி சிறிது நேரம் சும்மா இருந்தான். ''மகேந்திரன் துரதிருஷ்டம் பிடித்தவன். அதனால்தான் உன்னை இழந்துவிட்டான்'' என்றான்.

அன்னபூரணி திடுக்கிட்டாள். ''அப்படியெல்லாம் சொல்லாதே! எனக்கு மகேந்திரன்மேல் கோபம் தாபம் எதுவும் இல்லை. நான் வெளியேறிவிட்டால் குடும்பத்தில் அமைதி இராது'' என்றாள் அவள்.

வெறித்த நோக்குடன் விஹாரி வாயடைத்து உட்கார்ந்திருந்தான். அன்னபூரணி தலைப்பிலிருந்து ஒரு ஜோடி தங்க வளையல்களை எடுத்தாள். ''அப்பா! இந்த வளையலை வைத்துக் கொள். உனக்குக் கல்யாணம் ஆகிப் பெண்டாட்டி வரும்போது, என் ஆசியென்று அவளுக்குப் போடு'' என்றாள்.

விஹாரி அந்த வளையல்களைக் கண்களில் ஒற்றிக்கொண்டு, கண்ணீரை அடக்கிக்கொள்ளத் தன் அறையினுள் சென்றான்.

விடை பெறும்போது அன்னபூரணி, ''அப்பா விஹாரி, மகேனையும் ஆசாவையும் கவனித்துக்கொள்'' என்றாள். ராஜலட்சுமியிடம் ஒரு பத்திரத்தைக் கொடுத்து, ''அக்கா! மாமனாரின் ஆஸ்தியில் என் பங்கு உண்டே, அதை மகேந்திரன்

பேருக்கு எழுதிவிட்டேன். எனக்கு மாதம் பதினைந்து ரூபாய் அனுப்பிவிடுங்கள், போதும்'' என்றாள் அவள்.

ராஜலட்சுமியின் கால்களைத் தொட்டு வணங்கியதும் அன்னபூரணி விடை பெற்றுக்கொண்டு தீர்த்த யாத்திரைக்குக் கிளம்பினாள்.

8

ஆசாவுக்குப் பயம் உண்டாகிவிட்டது. இதென்ன! அம்மா போய்விட்டாள்; பெரியம்மாவும் போய்விட்டாள். இப்படி இவர்கள் நடத்தும் இல்லற இன்பம் எல்லாரையும் விரட்டி அடிக்கிறதே! இனித் தன்னையுங்கூட விரட்டி விடுமோ! வெறிச்சோடிய அந்த வீட்டினுள் இளந் தம்பதிகள் புதுக் குடித்தனம் நடத்துவது அவளுக்கு என்னவோ போல் இருந்தது.

குடும்பத்தின் கடினமான கடமைகளிலிருந்து காதலைப் பூப்போல் பறித்து வேருக்கிவிட்டால், தன் சுவையைக் கொண்டே தழைத்திருக்க அதனால் முடியாது. நாளடைவில் அது வாடி வற்றிப்போகும். தங்களுடைய ஓயாத சேர்க்கையில் ஒருவிதமான சோர்வும் பலவீனமும் இருப்பதை ஆசா உள்ளூற உணர்ந்தாள். அடிக்கடி அந்தக் காதல் வாடி இற்றுவிடுவதை அவள் கண்டாள். உறுதியும், பரந்ததுமான குடும்பப் பொறுப்பு இல்லாததால் அந்தக் காதலென்னும் கொடியைப் பிடித்து நிறுத்தி வைப்பது கடினமாயிற்று. வேலைகளிடையே காதல் வேர் ஊன்றாவிட்டால், இன்ப உணர்ச்சி முழு மலர்ச்சி அடையாது. அது நிலைத்தும் இராது!

மகேந்திரன் தனக்கு எதிராக இருந்த குடும்பத்தை வெறுத்து, தன் காதல் விழாவின் ஒளி விளக்குகளையெல்லாம் ஒரே சமயத்தில் ஏற்றி மிகவும் ஆடம்பரமாக, வெறிச்சிட்ட வீட்டினுள் காதலின் களிப்பை முற்றும் அநுபவிக்க முயன்றான். ஆசாவின் உள்ளத்தை அவன் தூக்குவதுபோல், ''சுனி! உனக்கு இப்போதெல்லாம் என்ன வந்துவிட்டது! பெரியம்மா போய்விட்டாள். அதற்காக இப்படி ஏன் மனவேதனைப் படுகிறாய்! நம் இருவருடைய காதலிலேயே அன்பின் நினைவு ஏற்படவில்லையா!'' என்றான்.

ஆசா மனவேதனையுடன், ''அப்படியென்றால் நமது அன்பில் எங்கோ குறை ஒன்று இருக்கவேண்டும். பெரியம்மாவைப்

பற்றி அடிக்கடி எனக்கு நினைவு வருகிறது. மாமியார் சென்று விட்டதைப்பற்றியும் எனக்குப் பயமாக இருக்கிறது' என்று எண்ணுவாள். அந்தக் குறைகளை எல்லாம் தீர்க்கத் தன்னால் இயன்றவரையில் முயலுவாள்.

வீட்டு வேலைகள் சரிவர நடப்பதில்லை. வேலைக்காரர்கள் வேலை செய்யாமல் ஏமாற்றத் தொடங்கினார்கள். ஒரு நாள் வேலைக்காரி உடம்பு சரியில்லை என்று வரவில்லை. சமையற் காரன் குடித்துவிட்டு எங்கேயோ ஓடிவிட்டான்! மகேந்திரன் ஆசாவிடம், ''நல்ல வேடிக்கைதான்! நாமே சமைத்துக் கொண்டால் போகிறது'' என்றான்.

மகேந்திரன் வண்டியில் ஏறிக் கறிகாய் வாங்கப் புது மார்க்கெட்டுக்குச் சென்றான். எந்த எந்தப் பொருள் எவ் வளவு வேண்டுமென்று அவனுக்குத் தெரியாது. கிடைத்த வற்றை ஏதோ வாங்கிக்கொண்டு களிப்புடன் வீடு திரும்பினான். அவற்றை வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று ஆசா வுக்கும் சரியாகத் தெரியாது. இந்தப் பரிசோதனை முடிய மணி மூன்றாகி விட்டது. பலவித அபூர்வமான உண்ணத் தகாத உணவுகளைப் படைத்த பெருமையில் மகேந்திரன் களிப்புற்றான். ஆனால் அவனுடைய களிப்பில் ஆசாவினால் பங் கெடுத்துக்கொள்ள முடியவில்லை. தன்னுடைய முட்டாள் தனமும், திறமையின்மையும் அவளை உள்ளூறக் கூசச் செய் தன. ஓரளவு ஆத்திரம் அவளுக்கு உண்டாயிற்று.

அறைகளில் பொருள்கள் கண்டபடி இறைந்து கிடந்தன. தேவைப்பட்டபோது எதுவும் கைக்குக் கிடைப்பது அரிதாகி யது. மகேந்திரன் சஸ்திர சிகிச்சைக்கு உபயோகிக்கும் கத்தி ஒரு நாள் கறிகாய் நறுக்க உதவிவிட்டுக் குப்பையின் நடுவே மறைந்தது. அவனுடைய குறிப்புப் புத்தகம் அடுப்பு விசிறு வதற்கு உபயோகப்பட்டது. பிறகு சமையலறையிலேயே சாம்பலுடன் கிடந்தது.

எதிர்பாராத இந்தக் குழப்பங்கள் மகேந்திரனுக்குக் களிப் பூட்டின. ஆனால் ஆசாவோ மனவேதனைப் பட்டாள். குடும் பத்தை இப்படி ஆற்றின் வெள்ளத்தில் மிதந்து செல்ல விடுவதுபோல் விட்டு அதில் களிகூர்வது மிகவும் பயங்கரம் என்று அந்தச் சிறுமிக்குத் தோன்றத் தொடங்கியது.

ஒரு நாள் அந்திப் பொழுதில் இருவரும் வராந்தாவில் கட்டிலில் உட்கார்ந்திருந்தனர். எதிரே திறந்த மொட்டை மாடி. மழைக்குப்பின் கல்கத்தாவின் மாளிகைச் சிகரங்கள் நிலாவெள்ளத்தில் மூழ்கிக் கிடந்தன. தோட்டத்திலிருந்து மழையில் நனைந்த மகிழ மலர்களைக் கொணர்ந்து ஆசா குனிந்த தலையுடன் மாலையாகக் கோத்துக்கொண் டிருந்

தாள். மகேந்திரன் அதை இழுத்தும், தடை செய்தும், குறை கூறியும் வீண் போர் துவக்க முயன்றான். இப்படியெல்லாம் தடை செய்வது கண்டு ஆசா அவனை ஏதாவது சொல்ல வாயெடுத்தால், மகேந்திரன் எப்படியாவது அவள் வாயைத் திறக்க விடாமல் செய்து அவளுடைய கோபத்தை முளையிலேயே அடக்கிவிடுவான்.

பக்கத்து வீட்டில் கூட்டுக்குள் இருக்கும் குயில் அந்தச் சமயம் ''குஹூ'' என்று கூவியது. அப்போது மகேந்திரனும் ஆசாவும் தங்கள் தலைக்குமேலே தொங்கிய கூட்டை நோக்கினார்கள். அவர்களுடைய குயில் பக்கத்து வீட்டுக் குயிலின் இசையை என்றைக்குமே பொறுத்துக்கொண்டதில்லை. இன்று மாத்திரம் அது ஏன் எதிர்மொழி கொடுக்கவில்லை!

''இதற்கு என்ன வந்தது?'' என்றாள் ஆசா கவலை பொங்க.

''உன் குரலைக் கேட்டு அதற்கு வெட்கமோ என்னமோ!'' என்றான் மகேந்திரன்.

ஆசாவின் குரல் வேண்டுதல் போலக் கெஞ்சியது. ''இல்லை, விளையாட்டில்லை. இதற்கு என்ன என்று பாருங்களேன்'' என்றாள்.

மகேந்திரன் கூட்டை எடுத்தான். கூட்டின் கதவைத் திறந்தபோது, பறவை உயிரின்றிக் கிடப்பது தெரிந்தது. அன்னபூரணி சென்றதும், வேலையாளும் விடைபெற்றுப் போய்விட்டான். அந்தப் பறவையை எவருமே கவனிக்கவில்லை.

அதைக் கண்ணுற்றதும் ஆசாவின் முகம் வாடியது. அவளுடைய விரல்கள் வேலை செய்ய மறுத்தன. மலர்கள் அப்படியே கிடந்தன. மகேந்திரனுக்கும் மனத்தில் வருத்தம் ஏற்பட்டது. இருந்தாலும், சுவையான வேளையில் தடங்கல் வருமோ என்ற அச்சத்தில் அவன் சிரித்து விஷயத்தை மறக்க அடிக்க முயன்றான். ''நல்லதாயிற்று. நான் நோயாளியைப் பார்க்கச் சென்றால், அது 'குஹூ' என்று கத்தி உன் உயிரை வாங்கிவிடும்'' என்று அவன் ஆசாவைத் தன் கைகளால் அணைத்து அருகே இழுக்க முயன்றான்.

ஆசா மெல்லத் தன்னை விடுவித்துக்கொண்டு மடியில் இருந்த மலர்களைக் கீழே கொட்டினாள். ''இன்னும் என்ன! சீ! நீங்கள் சீக்கிரம் போய் அம்மாவை அழைத்துக்கொண்டு வாருங்கள்'' என்றாள்.

9

இதே சமயம் மாடியில், "மகேன் அண்ணு!" என்ற குரல் கேட்டது. "யாரடா! வா, வா" என்று பதில் அளித்தான் மகேந்திரன். விஹாரியின் குரலைக் கேட்டு மகேந்திரனுடைய மனம் மலர்ச்சியுற்றது. கல்யாணத்துக்குப்பின் விஹாரி நடுநடுவே அவர்களுடைய அமைதிக்கு இடையூருக வருவான். இன்று அதே இடையூறு அமைதிக்கு மிகவும் தேவைப்பட்டது.

ஆசாவும் விஹாரியின் வருகையால் ஆறுதல் அடைந்தாள். தலையில் முக்காட்டை இழுத்து விட்டுக்கொண்டு அவள் பரபரவென்று எழுந்திருப்பது கண்டு மகேந்திரன், "எங்கே போகிருய்? வேறு யாருமில்லை; நம் விஹாரிதான் வருகிருன்" என்ருன்.

"அவருக்கு ஏதாவது தின்பதற்குக் கொண்டு வருகிறேன்" என்ருள் ஆசா.

ஏதாவது வேலை செய்வதற்கு அவகாசம் நேரிடவே, ஆசாவின் சோர்வு ஓரளவு குறைந்தது. மாமியாரைப்பற்றித் தெரிந்துகொள்ளத் தலையில் முசுக்குடன் அவள் நின்றிருந்தாள். அப்போதுங்கூட அவள் விஹாரியுடன் பேசவில்லை.

விஹாரி உள்ளே நுழைந்தவன், "அடடா உங்கள் கவி அரங்கில் குறுக்கிட்டுவிட்டேனே! பயப்படாதே, மன்னி! நீ உட்கார். நான் நடையைக் கட்டுகிறேன்!" என்ருன்.

ஆசா மகேந்திரனின் முகத்தை நோக்கிஞள். அவன், "விஹாரி! அம்மா எப்படி இருக்கிருள்?" என்று கேட்டான்.

"அம்மா, சின்னம்மா இவர்கள் பேச்சு இப்போது எதற்கு? அதற்கு வேண்டிய சமயம் கிடக்கிறது. இத்தகைய இரவு, தாய், சிற்றன்னை இவர்களைப்பற்றிப் பேசுவதற்கோ தூங்கிக் கழிப்பதற்கோ ஏற்பட்டதல்ல" (Such a night was not made for sleep, nor for mothers and aunts) என்றவாறு விஹாரி திரும்பலாஞன்.

மகேந்திரன் அவனைக் கட்டாயப்படுத்தி இழுத்து உட்கார வைத்தான்.

"மன்னி! நீயே பார்த்துக்கொள். என்மேல் தப்பு இல்லை. என்னைப் பலவந்தமாக இழுத்து வந்திருக்கிருன். மகேன்தான் பாவம் செய்தவன். என்மேல் சாபம் கொடுத்து விடக்கூடாது" என்ருன் விஹாரி.

பதில் ஒன்றும் சொல்ல முடியவில்லையே என்று ஆசா பொருமுவாள்; விஹாரி வேண்டுமென்றே தனக்கு எரிச்ச

லூட்டுவதற்கே இப்படிச் செய்கிறான் என்று எண்ணு வாள்.

''வீட்டின் அழகுதான் தெரிகிறதே! அம்மாவை அழைத்துவர இன்னுமா வேளை வரவில்லை?''

''நன்றாகச் சொன்னாய்! நாங்கள் அவளைத்தானே எதிர் பார்த்துக் காத்துக் கிடக்கிறோம்!'' என்றான் மகேந்திரன்.

''அதை அவளுக்குக் கடிதம் எழுதித் தெரிவிக்க உனக்கு வெகு நேரமாகாது. ஆனால் அது அவளுக்கு எவ்வளவு களிப்பை யூட்டும் தெரியுமா!...மன்னி! மகேனுக்கு அதற்காக இரண்டு நிமிஷம் ஓய்வு தரவேண்டும். உன்னிடம் நான் வேண்டிக் கொள்வது இதுதான்.''

ஆசா ரோஷத்துடன் சென்றாள். அவள் கண்களில் நீர் வடிந்தது.

''எந்த நல்ல வேளையில் நீங்கள் பார்த்துக்கொண்டீர் களோ? சமாதானமே காணோமே! எப்பொழுதும் சண்டை தானா!'' என்றான் மகேந்திரன்.

''உன்னை அம்மா பாழாக்கிவிட்டாள். இப்போது பெண்டாட்டியுங்கூடச் சேர்ந்துவிட்டாள். அது எனக்குப் பொறுக்கவில்லை. சமயம் வாய்க்கும்போது இரண்டொரு வார்த்தை சொல்லிவிடுகிறேன்.''

''அதன் பலன் என்ன, பார்த்தாயா?''

''உன் விஷயத்தில் பலன் ஒன்றையும் காணோம். ஆனால் என் வரைக்கும் ஏதோ ஓரளவு பலன் இருக்கிறது.''

10

விஹாரி தானே உட்கார்ந்து மகேந்திரனைக் கடிதம் எழுதச் செய்தான். அதைத் தானே எடுத்துக்கொண்டு ராஜலட்சுமியை அழைத்துவர மறுநாளே புறப்பட்டான். இந்தக் கடிதம் எழுதுவித்தது விஹாரிதான் என்று ராஜலட்சுமிக்குத் தெரியும்; என்றாலும், அவளால் இருக்க முடியவில்லை. அவளுடன்கூட விநோதினியும் வந்தாள்.

மாமியார் வந்து வீடு இருந்த நிலையைப் பார்த்தாள்; தூசு படிந்து அலங்கோலமாகக் கிடந்த வீட்டைக் கண்டதும், மருமகளின்மேல் இருந்த வெறுப்பு, பின்னும் அதிகமாகியது.

மருமகளிடம் இதென்ன மாறுதல்! அவள் நிழல்போல் மாமியாரைப் பின்தொடர்ந்தாள். உத்தரவு பெறுவிட்டா

லும், அவளுடைய வேலைகளில் ஒத்தாசை செய்ய முன் வந்தாள். ஆனால் மாமியாரோ பரபரப்புடன், ''அதை வை! நீ நாசமடித்து விடுவாய். உனக்குத் தெரியாத வேலையில் ஏன் கை வைக்கிறாய்?'' என்றாள்.

அன்னபூரணி சென்றதன் பலனாகவேதான் ஆசா இவ்வளவு திருந்தினாள் என்று ராஜலட்சுமி முடிவு செய்தாள். 'சின்னம்மா இருந்த மட்டும், மனைவியுடன் சந்தோஷமாகத் தொந்தரை இன்றி இருந்தோம். அம்மா வந்ததுமே பிரிவுத் துயரம் மூண்டுவிட்டதே என்று மகேந்திரன் எண்ணுவானே! இதனால் அன்னபூரணிதான் தனக்கு வேண்டியவள், அம்மா தன் சுகத்துக்குத் தடை என்றுதானே அவனுக்குத் தோன்றும்? இது எதற்கு?' என்று அவள் எண்ணினாள்.

இப்போது பகலில் மகேந்திரன் அழைத்தால், ஆசா செல்லத் தயங்குவாள். ஆனால் ராஜலட்சுமி அவளைக் கோபித்துக்கொள்ளுவாள்; ''மகேன் கூப்பிடுகிறான், அது உனக்குக் காது கேட்கவில்லையா? மிகவும் செல்லம் கொடுத்தால் இப்படித்தான் ஆகும், கடைசியில்...போ! காய்கறி நறுக்க வேண்டிய அவசியமில்லை...'' என்பாள்.

பலகை, பென்ஸில், புத்தகங்களுடன் மீண்டும் கண்ணாமூச்சி ஆட்டம் தொடங்கியது. காதலில் காரணமின்றி ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுவது, யாருடைய அன்பு அதிகம் என்று அநாவசியமாக விவாதிப்பது, மழை நாள் பகலை இரவாக்குவது, நிலா இரவைப் பகலாக்கிக்கொள்வது; களைப்பு, சோர்வு இவற்றை உடல் வலிமையைக் கொண்டு போக்கிக்கொள்வது; கூடி முயங்குவது - இப்படிப் பொழுது போயிற்று. சோர்ந்த மனத்தில் களிப்பூட்டாவிட்டாலும், அணைப்பிலிருந்து பிரிந்து செல்வது பயமாகத்தான் இருந்தது. இன்பச் சேர்க்கை நீறு பூத்த பின்னரும், வேறு வேலையாகச் செல்லக் கால் எழவில்லை. இப்படி அவர்களுக்குள் பழக்கமாகி விட்டது. இந்தக் களியாட்டத்திற்கே இது ஒரு சாபத் தீடு. சுகம் நீண்ட காலம் இராது. ஆனால் தனையோ தவிர்க்க முடியாததாகிவிடும்.

விநோதினி அன்று ஆசாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டாள். ''அம்மா! நீ குறைவின்றி நீண்ட காலம் இரு. ஆனால் பாக்கியமற்ற என்னைக் கண்ணெடுத்தும் பார்க்கக் கூடாதா?'' என்றாள்.

சொந்த உறவினர் வீட்டில் இளமைப் பருவமுதல் வேற்றுப் பெண் போல் வளர்ந்தவள் ஆசா. அதனால் சாதாரணமாக ஜனங்களுடன் பழகுவதில் அவளுக்கு ஓரளவு கூச்சம். யாராவது ஒதுக்கி விடுவார்களோ என்ற அச்சம் வேறு அவ

ளுக்கு. வளைந்த புருவம், கூரிய பார்வை, தீர்மையான முகம், தளதளவென்ற இளமை இவற்றுடன் விநோதினி வந்தபோது, அவளுடன் பேசிப் பழக ஆசாவுக்குத் துணிவில்லை.

ராஜலட்சுமியிடம் விநோதினி கூச்சம் இன்றிப் பழகு வதைக் கண்டாள் ஆசா. ராஜலட்சுமியும் ஆசாவுக்குத் தெரிந்தே விநோதினிக்குப் பரிசுகள் கொடுத்தாள். ஆசா வுக்குக் கேட்கும்படியாகவே அவள் அவ்வப்பொழுது விநோ தினியைப் புகழ்ந்துகொள்வாள். வீட்டு வேலைகளில் விநோ தினியின் கைத்திறனை ஆசா கண்டாள். கூடப் பிறந்தவளைப் போலவே விநோதினி அதிகாரம் செலுத்தினாள். ஆட்களை வேலையில் ஏவுவது, மிரட்டுவது, கட்டளையிடுவது எதிலும் அவள் சற்றும் தயங்குவதில்லை. இவற்றைக் கண்ட ஆசா விநோதினிக்கு முன் தன்னை மிகவும் தாழ்ந்தவளாகவே பாவித் துக் கொண்டாள்.

அவ்வளவு குணவதியான விநோதினி தானாகவே ஆசா விடம் வந்து உறவு கொண்டாடவே, கூச்சத்தடை தகர்ந்து அச்சிறுமி களிப்புக் கடலில் ஆழ்ந்தாள். மந்திரக் கோல் பட்டு வளர்ந்த செடிபோல் அவர்களுடைய நட்பு ஒரே நாளில் முளைத்து வளர்ந்து பூத்தும் விட்டது.

''நாம் ஏதாவது உறவு முறை கொண்டாடலாமா?'' என்றாள் ஆசா.

விநோதினி சிரித்தாள். ''என்ன உறவு முறை வைத்துக் கொள்ளலாம்?'' என்றாள்.

ஆசா அப்போது, ''மருக்கொழுந்தே, மனோரஞ்சிதமே - இப்படி எத்தனையோ பொருளின் பெயரை வைத்து அழைக் கட்டுமா உன்னை?'' என்றாள்.

''அதெல்லாம் பழசாகிவிட்டது. அந்தச் செல்லப் பெயர் களுக்கெல்லாம் இப்போது மவுசு கிடையாது!'' என்றாள் விநோதினி.

''ஆனால் உனக்குப் பிடித்தது எது?''

விநோதினி சிரித்து, '' '**கண்ணராவி**' (சோகேர் பாலி)'' என்றாள்.

கேட்க இனிமையான பேர்களைத்தான் ஆசா விரும்பினாள். ஆனால் விநோதினியின் ஆலோசனைப்படி செல்லமாகத் திட்டுவதையே ஏற்றுக்கொண்டாள். அவள் கழுத்தைத் தழுவியவாறு ஆசா, ''என் கண்ணராவியே!'' என்று சிரிக்கலானாள்.

11

ஆசாவுக்கு ஒரு தோழி மிகவும் தேவையாக இருந்தாள். காதலின் விழா, இருவர் மாத்திரம் இருந்தால் நிறைவு பெருது. இன்ப விளைவுகளைப் பகிர்ந்துகொள்ள வீணர்களும் தேவை.

இளந் தம்பதிகளின் புதுக் காதலின் வரலாறுகளை, குடிகாரன் கள் அருந்துவதுபோல், வறண்ட உள்ளத்துடன் இருந்த விநோதினி காதாரக் கேட்பாள். அவளுடைய மூளை மயங்கி, உடம்பில் இரத்தமும் கொதிக்கத் தொடங்கியது.

ஓசையடங்கிய பகல் வேளையில் அம்மா தூங்குவாள். வேலையாட்களும் கீழே இளைப்பாறுவதற்காகக் கண் மறைவாகச் செல்வர். மகேந்திரன் விஹாரியின் துளைச்சல் தாங்காமல் காலேஜுக்குச் செல்வான். வெயில் காயும் நீலவானின் ஒரு மூலையிலிருந்து கழுகுகளின் உரத்த குரல் அவ்வப்பொழுது கேட்கும். அந்தமாதிரிப் பொழுதில் படுக்கை அறையின் தனிமையில் தரையில் தலையணையின்மேல் கூந்தலைப் படரவிட்டவாறு ஆசா படுத்திருப்பாள். விநோதினி மார்பின் கீழ்த் தலையணையை வைத்துக்கொண்டு கவிழ்ந்து படுத்தவாறு ஆசாவின் இனிய பேச்சில் மூழ்கியிருப்பாள். அவளுடைய காது நுனிகள் சிவந்துவிடும். அவளுக்கு வேகமாக மேல் மூச்சு வாங்கும்.

விநோதினி கேள்விமேல் கேள்வி போட்டு ஒரு சிறிதும் விடாமல் கேட்பாள். ஒரு விஷயத்தைத் திரும்பத் திரும்பக் கேட்பாள். அது முடிந்துவிட்டால் கற்பனையில் இறங்குவாள். ''அது சரி, இப்படி இருந்தால் எப்படி இருக்கும்! நீ என்ன செய்திருப்பாய்?'' என்பாள். நடக்கக்கூடாத கற்பனைகளினூடே இன்ப வரலாற்றை நீடித்துக்கொண்டு செல்வது ஆசாவுக்கும் பிடித்திருந்தது.

''உனக்கும் விஹாரி பாபுவுக்கும் கல்யாணமாகியிருந்தால்!'' என்ருள் விநோதினி.

''அந்தப் பேச்சையே எடுக்காதே! சீச்சீ! எனக்கு மிகவும் கூச்சமாக இருக்கிறது. ஆனல் உனக்கும் அவருக்கும் நடந்திருந்தால் நன்ருக இருந்திருக்கும். உனக்குங்கூடத்தான் கேட்டார்கள்.''

''எனக்கு வந்த பேர்வழிகளுக்கு என்ன குறைச்சல்! ஆகாதது நல்லதாயிற்று. எனக்கென்ன, நன்ருகத்தானே இருக்கிறேன்!''

ஆசா அதற்கு எதிராகப் பேசுவாள். தன்னைவிட விநோ

தினியின் நிலே மேலானது என்று அவள் எவ்வாறு ஒப்புக் கொள்ளுவாள்? ''ஒரு தடவை யோசித்துப் பார், எங்கள வருடன் உனக்குக் கல்யாணம் ஆகியிருந்தால் எப்படி இருந் திருக்கும்! இன்னும் கொஞ்சம் இருந்தால் நடந்தே இருக்குமே!'' என்பாள் ஆசா.

நடந்துதான் இருக்கும். ஏன் அப்படி நடைபெறவில்லே? ஆசாவின் இந்தப் படுக்கையும் கட்டிலும் ஒரு காலத்தில் அவளுக்காகத்தான் காத்திருந்தன. முற்றும் அலங்கரித் திருக்கும் இந்தப் பள்ளியறையைக் காணும்போதெல்லாம் விநோதினிக்கு அந்த விஷயம் நினேவுக்கு வரும். இன்று அவள் அந்த வீட்டில் ஒரு விருந்தாளிதானே! இன்று கிடைத்த இடம்; நாளேயே போக வேண்டியும் வரும்.

அன்று பிற்பகல் விநோதினி வலியச் சென்று மிகவும் வனப்பாக ஆசாவின் கூந்தலே அழகாகப் பின்னி அலங்கரித்துக் கணவனின் அறைக்கு அனுப்பினுள். அவளுடைய கற்பனேயும், தலேகுனிந்து முசுக்கிட்டுச் செல்லும் அம்மடந்தையின் பின்னுலேயே அழகில் மயங்கிய ஓர் இளேஞனேத் தேடி யாருமே இராத அந்த அறைக்குச் செல்லும். ஒரொரு நாள் அவள் ஆசாவை விடவே மாட்டாள். ''இன்னும் கொஞ்ச நேரந்தான் இரேன். ' உன் புருஷர் எங்கேயும் ஓடிவிட மாட்டார். அவர் என்ன, காட்டில் ஓடும் மாயமானு! தலேப்பில் கட்டுண்டு பழகிய மானுக்கும் அவர்!'' என் றெல்லாம் பேசி ஏதாவது சாக்கிட்டு அவளேத் தாமதிக்க வைப்பாள்.

மகேந்திரனுக்குக் கோபமாக வரும். ''உன் தோழி என்ன அசைய மாட்டாள் போல் இருக்கிறதே! அவள் எப்போது ஊருக்குப் போவாள்?'' என்பான்.

ஆசா பரபரப்படைவாள். ''இல்லே. அவள் என் தோழி. அவள்மேல் கோபித்துக்கொள்ளாதீர்கள்! உங்களேப் பற்றிப் பேசினுல் அவளுக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா! எவ்வளவோ வேலே நடுவே என்னேச் சிங்காரித்து உங்களிடம் அனுப்புகிருள்!''

ராஜலட்சுமி ஆசாவை ஒரு வேலேயும் செய்ய விட மாட்டாள்! விநோதினி மருமகள் பக்கமாகப் பேசி ஆசாவை யும் வேலேயில் பழக்க ஆரம்பித்தாள். நாளெல்லாம் விநோதினி சோம்பலின்றி வேலேயில் ஈடுபட்டிருப்பாள். அதோடு ஆசாவையும் அவள் ஓய விடமாட்டாள். அடுத் தடுத்து விநோதினி சங்கிலித்தொடர் போல் வேலேயை உண்டாக்குவாள். அதன் நடுவே ஆசாவுக்குச் சற்றும் ஓய்வே இராது. ஆசாவின் கணவன், மேலே வெறும் அறையின்

மூலையில் கோபம் பொங்கத் தவித்துக் கொண்டிருப்பதாகக் கற்பனை செய்வாள். விநோதினி. உள்ளூறக் கடுமையான சிரிப்பு எழும். ஆசா கவலையுறுவாள். ''அடியம்மா! நான் போகிறேன். அவருக்குக் கோபம் வரும். அப்புறம்..'' என்று கெஞ்சுவாள்.

வினோதினி பரபரப்புடன், ''இரு, இதைச் செய்து விட்டுப் போயேன். அப்படி ஒன்றும் நேரம் ஆகாது'' என்பாள்.

சற்று நேரங் கழித்து, ஆசா மீண்டும் தவிப்பாள். ''இல்லையடி! நிச்சயம் இதற்குள் அவருக்குக் கோபம் வந்து விட்டிருக்கும். என்னை விடேன். நான் போகிறேன்'' என்பாள்.

''சற்றுக் கோபம் வந்தால்தான் என்ன! கொஞ்சலுடன் சற்று ஊடல் இருந்தாலொழியக் காதலில் சுவை இராது. உணவுக்கு ருசி தர உப்பு, புளி, மிளகாய்போல் அது அவசியம்!''

ஆனால் மிளகாயின் சுவை என்ன என்பது விநோதினிக்குத் தெரியும். அவளுடைய நரம்புகளிலெல்லாம் எரிச்சல் மூண்டது. அவள் பார்க்கும் திசைகளிலெல்லாம் அவளுடைய கண்ணின் தீப்பொறியே வீசின. இவ்வளவு சுகமான வீடு. ஆதரவு காட்டும் கணவன்! என் உரிமைக்குக் கீழ் இந்த வீட்டையும் என் காலின் கீழ் அடிமையாக இந்தப் புருஷனையும் வைத்திருந்திருப்பேன். அப்போது இந்த வீட்டின் நிலை இப்படி இருந்திருக்குமா? இந்த மனிதர்தாம் இந்த லட்சணத்தில் இருப்பாரா! என் இடத்தில் இந்தக் குழந்தையா! இந்த விளையாட்டுப் பொம்மையா!' என்று பற்றி எரியும் அவளுக்கு. ஆசாவின் கழுத்தைக் கட்டிக்கொள்வாள் அவள். ''அடி! சொல்லேன். நேற்று என்ன பேசிக்கொண்டீர்கள்? உனக்குக் கற்றுக் தொடுத்தேனே, அதைச் சொன்னாயோ? உங்கள் காதலைப்பற்றிக் கேட்டாலே எனக்குப் பசி, தாகம் எல்லாம் போய்விடுகிறது'' என்பாள் அவள்.

12

ஒரு நாள் மகேந்திரன் வெறுத்துப்போய் அம்மாவிடம் சென்றான். ''இது நன்றாக இருக்கிறதா! பிறத்தியான் வீட்டு விதவைப் பெண், அதுவும் வயது வந்தவளை அழைத்து வந்து தலையில் பொறுப்பைப் போட்டுக்கொள்ள என்ன அவசியம் வந்தது! எனக்கு இதில் துளியும் விருப்பம் இல்லை. எப்போது, என்ன சங்கடம் வருமோ, யாருக்குத் தெரியும்?'' என்றான்.

''அவள் எங்கள் விபினன் பெண்டாட்டி. அவளை நான் வேற்றுப் பெண்ணாக நினைக்கவில்லையே!'' என்றாள் ராஜலட்சுமி.

''இல்லையம்மா! நீ செய்வது நன்றாக இல்லை. அவளை வைத்திருப்பது சரியென்று எனக்குப் படவில்லை.''

மகேந்திரனுடைய பிடிவாதத்தை அலட்சியம் செய்வது எளிதன்று என்பது ராஜலட்சுமிக்குத் தெரியும். அதனால் அவள் விஹாரியைக் கூப்பிட்டனுப்பினாள். ''விஹாரி! நீ போய் மகேனுக்கு எடுத்துச் சொல்லு! விபினனின் பெண் டாட்டி இருக்கிறாள், அதனால்தான் இந்தத் தள்ளாத வயதில் கொஞ்சம் நிம்மதி இருக்கிறது. அயல் பெண்ணாக இருந் தால்தான் என்ன! சொந்த உறவினரிடமிருந்து இத்தகைய தொண்டு எனக்குக் கிடைக்கிறதா!'' என்றாள்.

விஹாரி அவளிடம் ஒன்றும் பேசாமல் மகேந்திரனிடம் சென்று, ''மகேன் அண்ணா, விநோதினியைப்பற்றி உனக்கு என்ன தோன்றுகிறது?'' என்றான்.

மகேந்திரன் சிரித்தான். ''அதைப்பற்றித்தான் எண்ணி எண்ணி எனக்கு இராத் தூக்கமே போய்விட்டது. உன் மதனியைக் கேள். இப்போதெல்லாம் விநோதினியின் நினை வில் மூழ்கி வேறு எதுவுமே மனத்தில் நிற்காமல் போய் விட்டது!'' என்றான்.

ஆசா முக்காட்டிலிருந்து மௌனமாக மிரட்டினாள்.

''என்னது! இரண்டாவது 'விஷ விருட்சம்' முளைக் கிறதா?''

''அதுவேதான்! இப்போது அவளை விரட்டி விடவேண்டு மென்று சுனி தவியாய்த் தவிக்கிறாள்.''

மீண்டும் ஆசாவின் விழிகள் திரைமறைவிலிருந்தே மிரட் டலைச் சொரிந்தன.

''விடை கொடுத்து மிரட்டினாலும் திரும்பத் தாமத மாகுமா என்ன!..அந்த விதவைக்கு மணம் செய்து வைத் தால் நச்சுப்பல் உடையும்'' என்றான் விஹாரி.

"'விஷ விருட்ச'த்தில் குந்தநந்தினிக்குக்கூடத்தான் கல்யாணம் நடந்தது.''

''போதும். அந்த மேற்கோள் இப்போது வேண்டாம். விநோதினியைப் பற்றிநான்கூட நடுநடுவே நினைப்பதுண்டு. உங்கள் வீட்டில் அவள் எப்போதும் இருப்பது முடியாது. நான் பார்த்துவிட்டு வந்தேனே, அந்தப் பட்டிக்காட்டில் வாழ் நாள் முழுமையும் கழிக்க அவளை அனுப்புவது மிகக் கடுமையான தண்டனை.''

மகேந்திரனுக்கு முன்னால் விநோதினி இதுவரையில் வந்ததில்லை. ஆனால் விஹாரி அவளைப் பார்த்திருக்கிறான். காட்டில் துறந்து விடும்படியான பெண் அல்ல அவள் என்பதை விஹாரி உணர்ந்தான். ஆனால் சுடர், வீட்டில் விளக்கை ஏற்றுவது போல மற்றொரு புறம் வீட்டுக்குத் தீயை மூட்டவும் கூடும். அந்தத் திகிலும் விஹாரியின் மனத்தில் இருந்தது.

மகேந்திரன் இது விஷயமாக விஹாரியை எவ்வளவோ ஏளனம் செய்தான். விஹாரியும் தக்கவாறு பதில் சொன்னான். ஆனால் இந்தப் பெண், விளையாடும் ரகத்தைச் சேர்ந்தவளல்ல, இவளை ஒதுக்கிவிட முடியாது என்றுமட்டும் அவனுக்கு நன்றாகப் புரிந்தது.

ராஜலட்சுமி விநோதினியை எச்சரிக்கை செய்தாள்: "இதோ பாரம்மா! அவளை நீ அதிகமாக அலைக்கழிக்காதே! நீ நாட்டுப்புறத்துக் குடும்பத்தில் பழகியவள். இந்தக் காலத்துப் பழக்கமெல்லாம் தெரியாது. நீ புத்திசாலி. நன்றாக யோசித்துக் கவனமாக நடந்துகொள்.''

அதுமுதல் விநோதினி ஆசாவை விலக்குவது போல் வெளிக்குக் காட்டினாள். ஆசாவிடம், ''நான் யாரோ! என் நிலையில் இருப்பவர்கள் தங்கள் கௌரவத்தைக் கட்டிக் காத்துக் கொள்ளாவிட்டால், என்று என்ன நடக்குமோ!'' என்றாள் அவள்.

ஆசா அழுது கெஞ்சிப் பார்த்தாள். விநோதினியோ ஒரே உறுதியாக இருந்தாள். தன் மனத்தில் இருந்தவற்றை எல்லாம் ஆசா சொற்களாகக் கொட்டித் தீர்த்தாள். ஆனால் விநோதினி அதற்குச் சற்றும் இடம் தரவில்லை.

மகேந்திரனுடைய அணைப்பு வரவரத் தளர்ந்தது. அவனுடைய அன்புப் பார்வையிலும் ஒரு சோர்வு புலனாகியது. முன்பெல்லாம் அவனுக்குக் களிப்பூட்டிய சிறு தவறுகள் இப்போது அவனை வதைக்கலாயின. குடும்ப வேலைகளில் பழக்கமில்லாத ஆசாவைக் கண்டு அவனுக்கு வெறுப்பாக இருக்கும்; ஆனால் வெளிப்படையாகச் சொல்ல மாட்டான். அவன் சொல்லாவிட்டாலும் ஆசா அதைப் புரிந்துகொண்டாள்.

பிரிவை அறியாத கூடலால் காதலின் கௌரவமே மங்கி விடுவதை அவளால் உணர முடிந்தது. 'மகேந்திரனின் அரவணைப்பும் ஓரளவு நடிப்பாகவும், ஓரளவு வஞ்சகமாகவும் தோன்றியது.

இந்த வேளையில் ஓடுவதைத் தவிர வேறு வழியில்லை: பிரிவுதான் இதற்கு ஏற்ற மருந்து. பெண்களுக்கே இயல்பாக உள்ள பழக்கம் காரணமாக ஆசா வர வர மகேந்திரனை ஒதுக்கலானாள். ஆனால் விநோதினியை விட்டால், அவளுக்குப் போக்கிடம் ஏது!

இன்பப் பாயலில் சாய்ந்து மகேந்திரன் மெல்ல மெல்லக் குடும்பக் காரியங்களையும் படிப்பையும் பற்றி எண்ணலானான். சிதறிக் கிடந்த புத்தகங்களை யெல்லாம் தேடி எடுத்துத் தூசு போகத் தட்டிவைத்தான். கால்சட்டை, மேல் சட்டைகளை எல்லாம் வெயிலில் போட்டு மடித்து வைக்கலானான்.

13

விநோதினி எதற்கும் மசியாமல் போகவே, ஆசாவுக்கு ஒரு யோசனை மூளையில் உதித்தது. ''அடியம்மா! என் புருஷரெதிரே ஏன் வருவதே இல்லை நீ? ஏன் ஓடி ஒளிகிறாய்?'' என்று கேட்டாள் அவள்.

விநோதினி சுருக்கமாகவும் அழுத்தமாகவும், ''சீச்சீ!'' என்ற பதில் அளித்தாள்.

''ஏன்? அம்மா சொன்னாளே: நீ எங்களுக்கு வேற்றுப் பெண் இல்லை!''

விநோதினி சற்று அமைதியாகவே, ''உலகத்தில் சொந்தம் வேறு, வேற்றாள் வேறு என்பது இல்லை. யாரைச் சொந்தமாக நினைக்கிறோமோ அவர்கள் சொந்தமானவர்கள். யார் வேறாக நினைக்கிறார்களோ, அவர்களுக்கு உறவினர்கூட வேறுதான்'' என்றாள்.

'இதற்கு மேல் சொல்ல என்ன இருக்கிறது! உண்மையிலேயே என் புருஷருக்கு விநோதினியின்மேல் கோபம். அவளை வேறாகப் பாவிக்கிறார். அநாவசியமாக அவள்மேல் வெறுப்புக் காட்டுகிறார்' என்று நினைத்தாள் ஆசா.

அன்று மாலை ஆசா கணவனை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டாள். ''என் தோழி 'மாயா'வுடன் நீங்கள் பேச வேண்டும்.''

''ஏது! உனக்குத் துணிச்சல் அதிகமாக இருக்கிறதே!'' என்றதும் மகேந்திரன் சிரித்தான்.

''ஏன்! எதற்குப் பயப்பட வேண்டும்?''

''உன் தோழியின் அழகைப்பற்றி நீ அவ்வளவு சொல்லும்போது, சற்று ஆபத்தான இடமென்றுதான் எனக்குத் தோன்றுகிறது.''

''அதை நான் பார்த்துக்கொள்வேன். உங்கள் கேலிப் பேச்சுப் போதும்! அவளோடு பேசுவீர்களா, முடியாதா? அதைச் சொல்லுங்கள்.

விநோதினியைக் காணும் ஆவல் மகேந்திரனுக்கு இல்லை என்று சொல்லிவிட முடியாது. அவளைப் பார்க்கும் ஆவல் அவ்வப்போது அவனுக்கு எழுவதும் உண்டு. ஆனால் அந்த அநாவசியமான ஆவல் அவனுக்குத் தகுதியுள்ளதாகப் படவில்லை.

உள்ளத்தின் உறவு விஷயத்தில் தகுதியற்றது, தகுந்தது என்ற இலட்சியம் மற்றவர்களைவிட மகேந்திரனிடம் சற்றுக் கடுமையாகவே இருந்தது. தாயின் உரிமை குறைந்து விடுமோ என்றுதான் முன்பெல்லாம் கல்யாணம் என்ற பேச்சையே எடுக்காமல் இருந்தான். இப்போதோ, ஆசாவுடன் இருக்கும் மனப்பிணைப்பை அவன் காக்க எண்ணினான். வேறு எந்தப் பெண் விஷயமாகவும் சிறிதளவு ஆவல்கூட மனத்தில் எழ விட அவன் விரும்பவில்லை. காதல் விஷயத்தில் தான் மிகவும் கண்டிப்பானவன், மிகவும் நேர்மை வாய்ந்தவன் என்று அவன் பெருமையுங்கூடப் பட்டான். விஹாரியை நண்பனென்று ஏற்றுக்கொண்ட பின்னர் வேறு எவரையும் நண்பரென ஏற்றுக்கொள்ள அவன் விரும்பவில்லை. வேறு யாரேனும் தன்னை அணுகினால், மகேந்திரன் அவர்கள்மேல் விழுந்து அவமானப்படுத்துவதுடன் நிற்க மாட்டான்! விஹாரியிடம் அந்தத் துரதிருஷ்டசாலியைப்பற்றிப் பரிகாசம் செய்து பழிப்பான். மற்றவர்கள்மேல் தனக்கு இருக்கும் அலட்சிய மனப்பான்மையை நன்கு வெளிக் காட்டிக்கொள்ளுவான். விஹாரி இதற்கு எதிராகப் பேசினால், ''உன்னால் முடியும், விஹாரி! எங்கே போனாலும் உனக்குத் தோழர்கள் அகப்படுவார்கள். ஆனால் கண்ட பேரையும் நண்பனென்று இழுத்துப் போட்டுக்கொள்ள என்னால் முடியாது'' என்பான் மகேந்திரன்.

ஆகவே, நடுநடுவே இந்தத் தடுக்க முடியாத ஆவல் மனத்தில் எழுந்து, முன் பின் தெரியாத அந்தப் பெண்ணைக் குறித்துச் செல்வது கண்டு, அவன் தன் இலட்சியத்துக்கு முன் தலைகுனிய வேண்டிவந்தது. கடைசியில், வெறுப்புற்ற அவன்